
# கிழக்கொளி



கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரைவில் திறக்கப்படவிருக்கும்
மூதவைக் கட்டடத்தின் மாதிரி அமைப்பு.

## ஆசிரியர் சங்க வெளியீடு

## நல்வாழ்த்துகள்

சகலவிதமான சில்லறைப் பொருட்களையும் மலிவு விலையில் பெற நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

**ஜோதி**

**ஸ்டோர்ஸ்**

கொம்மாதுறை

T.P 065 - 40577

சகல விதமான குளிர்பானங்களையும் "ஜில"லென்று குளிராகப் பருக விரையுங்கள்.

**JOTHY**

**COOL BAR**

Main street,
Kommathurai,
Chenkalady.

(ஓடருக்கு ஐஸ்கிறீம் சிற்றுண்டிகள் நிறைந்த தரத்துடன் வழங்கப்படும்

**VAN FOR HIRE**

*திருமண வைபவங்கள்

*தூர இடத்துப்பயணங்கள்

*விமான நிலையப் பயணங்கள்

அனைத்தையும் குறைந்த கட்டணத்துடன் சொகுசாகச் செல்ல நாடவேண்டிய ஒரே இடம

ந. ஜெகநாதன்,
11/2 ஏரன்ஸ் லேன்,
மட்டக்களப்பு.
T.P - 065 - 24274

சகல விதமான சில்லறைப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற நாடுங்கள்.

**சக்தி**

**ஸ்டோர்ஸ்**

பிரதான வீதி,
செங்கலடி.

T.P - 065 - 40327

# கிழக்கொளி

(கலை, கலாசார காலாண்டுச் சஞ்சிகை)

ஒளி: 6 (99 ஐப்பசி - மார்கழி) கதிர்: 4

*பிரதம ஆசிரியர்:*
எஸ். எஸ். சூரியகாந்தன்

*துணை ஆசிரியர்:*
அ. தேவராஜ்

**சஞ்சிகைக் குழு**
சாந்தா ஞானப்பிரகாசம்
ந. ஜெகநாதன்
வ. புவிராஜசிங்கம்
ப. ரமணீஸ்வரன்
மா. மகேந்திரன்

விலை: ரூபா 20/-

தொடர்பு

பிரதம ஆசிரியர்,
**கிழக்கொளி,**
விவசாயபீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை,
செங்கலடி.

உள்ளே:

01. இதயத்திலிருந்து........ 02
02. 20ம் நூற்றாண்டில்....... 03
03. மலர் மனிதருக்கு...... .07
04. இடைவிட்ட இயக்கம். .09
05. நான் .......................... 09
06. சமரே ஓய்ந்து ........... 11
07. சாமாதானம்.................. 12
08. நோயற்ற வாழ்வு......... 13
09. வித்தகன் .................. 14
10. கைவைத்தியம் .......... 16
11. ஈழத்து தமிழ் ........... 17
12. மத்திய வங்கி .......... .23
13. பீடைநாசினி ............... 25
13. குறுக்கெழுத்துப்போட்டி 39

தரமான உங்கள்
ஆக்கங்களை
வரவேற்கின்றோம். உங்கள்
கருத்தொளி விளக்கு
குடத்தில் இருக்காது
குன்றின் மீது இருக்கட்டும்.

## எமது இதயத்திலிருந்து.................... ✍

நாட்கள் வாரங்களாகி மாதங்களாகி வருடங்களாகி நூற்றாண்டுகளாகி அடுத்த நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கும் இச்சந்தர்ப்பத்திலே, கிழக்கொளியும் தன்னை நவீன மயப்படுத்த புறப்பட்டுவிட்டது. உற்பத்திச் செலவினங்கள் அதிகரிக்கும்போது விற்பனை விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாததொன்றாகி விடுகின்றது. கிழக்கொளியும் கொஞ்சம் பட்டு வேஷ்டி கட்டிப் பார்க்க ஆசைப்பட்டு தரத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் அதன் விலையில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இம்மாற்றத்தை பெருமனது கொண்ட வாசகப் பெருமக்கள் நல்மனதுடன் ஏற்றுக் கொள்வார்களென்ற நம்பிக்கை எமக்கு நிச்சயம் உண்டு. நாளாந்த விலை அதிகரிக்கும் ஏனையவற்றுடன் ஒப்பிடுகையில் இது யானைப் பசிக்கு சோளம் பொரிதான்! இருந்தும் இது கிழக்கொளியின் நீண்ட ஆயுளுக்கான ஓர் இலட்சார்ச்சனை போன்றே எமக்குப் புலப்படுகின்றது.

கிழக்கொளி தனது 24வது கதிரை வீசி அடுத்து நூற்றாண்டிலே தனது 25 வது கதிரை வீச ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. வெள்ளி இதழ் பல்சுவை அம்சங்களுடனும் வழக்கத்திற்கு மாறாக மேலும் பல மெருகூட்டிய பக்கங்களுடனும், மாணவர்களுக்கு நல்லறிவூட்டும் விடயங்களுடனும் வெளிவர ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. அடுத்த நூற்றாண்டை வரவேற்க முழு உலகமுமே கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது சிறிய படைப்பான கிழக்கொளியின் வெள்ளிக் கதிரையும் வரவேற்க நீங்கள் தயாராக இருப்பீர்கள் என்று எமக்குத் தெரியும். வெள்ளிக் கதிருக்கு உங்கள் பங்களிப்பு என்ன? என்பதையும் சற்று சிந்தித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆக்கங்கள் வெள்ளிக்கதிரை அலங்கரிக்க வேண்டாமா? உங்கள் கற்பனைக் களஞ்சியங்களை எமக்கு இன்றே அஞ்சலாக்குங்கள் எழுத்துருவில். ஒரு சிலர்தான் கிழக்கொளிக்கு தங்கள் பொன்னான நேரங்களைத் தியாகம் செய்கின்றனர். ஏன் மற்றவர்களும் தியாகம் செய்ய முடியாது? கொஞ்சம் மனம் வைத்து செயற்பட்டால் உங்கள் ஆக்கம் அதன் திறமை, பெருமைகள் எல்லாம் கிழக்கொளி

மூலம் எட்டுத்திக்கும் பிரகாசிக்கும். எங்கே! உங்கள் முயற்சியை பார்ப்போமே வெள்ளிக் கதிரில்!


கிழக்கொளியின் இந்த நூற்றாண்டுக்கான கடைசிக் கதிர் பல சிறப்பு ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளது. இவை பற்றிய உங்கள் கருத்துக்கள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. உங்கள் கருத்துக்கள் எதுவாயிருந்தாலும் அவை கிழக்கொளியின் சுபீட்ச மான எதிர்காலத்திற்கு கால்கோளிடும் என்பதையும் பெருமிதத்துடன் அறியத் தருகிறேன். கிழக்கொளி விற்பனை, வியாபார ரீதிக்குப் புறம்பாக கலை, இலக்கிய சேவையையே தன் முழு மூச்சாகக் கொண்டு செயற்படுவதால்தான் இன்று கிழக்கு வானிலே உதித்த சஞ்சித் தாரகைகளின் வரிசையில் அழியா இடத்தைப் பெற்ற ஒரே தாரகையாக கீழ்வானில் ஜொலித்துக் கொண்டிருக்கின்றது.

கிழக்கொளி மேலும் பல்லாண்டு காலம் வாழ உங்கள் ஆசியும், அநுசரணையும் தேவை. எறும்பூரக் கற்குழியும் என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் நாங்கள் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் பலர் மனங்களில் ஈரம் ஊறாதிருப்பது எமக்கு பெரும் மனவேத னையை ஏற்படுத்துகின்றது. இந்த நூற்றாண்டுக்கு விடை கொடுக்கும் இவ்வேளையில் அடுத்த நூற்றாண்டில் வெள்ளிக்கதிரில் உங்கள் அனைவரையும் சந்திக்கும்வரை எமக்கு ஆக்கமும், ஊக்கமும் நல்கி வரும் நல்லறிஞர், வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றோம்.

வணக்கம்

- பிரதம ஆசிரியர் -

# இருபதாம் நூற்றாண்டு முடிவில்



## ஈழத்துச் சிறுகதை

செ. யோகராசா **M.A**

இருபதாம் நூற்றாண்டு முடிவுறும் இவ்வேளையில் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி எங்கே நிற்கின்றது என்று சிந்தித்துப் பார்ப்பது பயனுடைய முயற்சியாகிறது.

ஈழத்திலே தமிழ்ச்சிறுகதையின் பிறப்பு முப்பதுகளளவில் தமிழ் நாட்டுச் சிறுகதை மணிக்கொடிக்குழுவினரூடாக உலகச் சிறுகதைத் தரத்துக்கு உயர்ந்திருக்கும் வேளையில் நிகழ்கிறது. ஆயினும் இக்கால கட்ட ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளான இலங்கையர்கோன் சி. வைத்தியலிங்கம் க.தி.சம்பந்தன் ஆகியோரது சிறுகதைகள் நாம் அனைவரும் அறிந்தது போல. றொமான்ரிசப் பண்புடையன. இவர்கள் காலத்தில் ஈழத்து மக்களது பிரச்சினைகளை ஆனந்தன், சுயா போன்ற சிலர் கையாண்டிருப்பதாக இப்போது அறியப்பட்டிருப்பினும் அது சமகால தமிழ்நாட்டுப் போக்குடன் ஒப்பிடும் போது திருப்திக்குரியதன்று.

நாற்பதுகளில் மறுமலர்ச்சி எழுத்தாளர்களது சிறுகதைகளில் ஈழத்து மக்களது வாழ்வு முன்னரை விட முக்கியம் பெறத் தொடங்கியது. நவீன நாகரிக நுழைவு, கோயில் பலியீடு, கிராமிய வாழ்வு, குடும்பஉறவு முதலியன அவர்களது கதைகளின் உள்ளடக்கமாயின.

மேற்குறிப்பிட்ட சிறுகதை எழுத்தாளர்கள் பெரும்பாலும் வடக்கில் யாழ்ப்பாணப் பிரதேசம் சார்ந்தவர்களாக அமைய, ஐம்பதுகள்ளவிலே கிழக்கிலே மட்டக்களப்பு, மூதூர்ப் பிரதேசங்களைக் களமாகக் கொண்ட சிறுகதைகளை முறையே பித்தனும், வ. அ. இராசரத்தினமும் எழுத முற்பட்டனர். பித்தன் கதைகளிலே மட்டக்களப்பு பிரதேச மக்களது வறுமையும், துணிகரமான விதத்தில் முஸ்லீம் மக்களது வாழ்வும் நன்கு சித்தரிக்கப்பட்டன.

ஆயினும், இக்காலகட்ட மற்றொரு எழத்தாளர் அப்துஸ்ஸமது கூறுவது போல, மட்டக்களப்புப் பிரதேச எழுத்தாளரது கதைகளிலே கணிசமானவை ஏறத்தாழ ஐம்பத்தைந்து வரை தமிழ்நாட்டுச் சூழலையே

பிரதிபலித்தன. ஏன், பொதுவாகவே அதுகால வரையிலான ஈழத்துச் சிறுகதைகளிலே பிரக்ஞை பூர்வமாகவோ, ஆழமாகவோ ஈழச்சூழலோ, பிரச்சினைகளோ வெளிப்படவில்லை. இத்தகைய நிலைமை முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயற்பாடுகள் காரணமாக மாறத்தொடங்கியதைத் தொடர்ந்தே, ஈழத்தவர் பிரச்சினைகள் குறிப்பாகச் சாதிமை. தொழிலாளர் வாழ்க்கைப் போராட்டம் என்பன பிரக்ஞை பூர்வமாக ஈழத்துச் சிறு கதைகளில் வெளிப்பட்டன. சமூகத்தின் அடிநிலை மக்கள் பற்றி, அவ்வகுப்பினரைச் சார்ந்தோரே எடுத்துக்காட்டாக டானியல், டொமினிக் ஜீவா. கே. வி. நடராஜன் போன்றோர் எழுத முற்பட்டனர். தமிழ் நாட்டுப் பரிபாஷையில் கூறினால், ஈழத்தில் 'தலித்' எழுத்துக்கள் இவர்களூடாகவே தோற்றங்கண்டன. இவ்விதத்தில் ஈழத்துச் சிறுகதை தமிழ்ச்சிறுகதை வளர்ச்சிப் போக்குடன் முதன்முதலாகச் சங்கமித்துக் கொள்வது மனங் கொள்ளத்தக்கது.

அதேவேளையில் முற்போக்கு அணிசாராதோரும் ஈழத்து மக்கள் வாழ்வினைப் பற்றிப் பேச முற்பட்டனர் (எ-டு செங்கை ஆழியான்). தவிர அறுபதுகள் தொடக்கம் பாலுணர்வு (எ-டு எஸ். பொ), ஆன்மீகம் (எ-டு மு. தளையசிங்கம்), பெண்களது வாழ்வு (எ-டு பவானி ஆழ்வாப்பிள்ளை), மலையகத் தொழிலாளர் வாழ்வு (எ.டு தெளிவத்தை ஜோசப். என். எஸ், ராமையா), முஸ்லீம் மக்களது வாழ்வு (எ-டு திக்குவெல கமால்). உளவியல் பிரச்சினைகள் (எ-டு நந்தி) என்றவாறு உள்ளடக்க ரீதியிலே ஈழத்துச் சிறுகதைப் பரப்பு ஆழமும் அகலமும் கண்டது.

எழுபதுகளில் தனிமனித அக உளைச்சல்களும் வாழ்க்கை பற்றிய தேடலும் (எ-டு அ. யேசுராசா) சிறுகதைப் பொருளாகின்றன.

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிப் போக்கில் எண்பதுகள் முக்கிய காலகட்டமாகின்றது. தமிழ்த்தேசியத்தின் உச்சமும் அதன் சாதக, பாதகமான விளைவுகளும் எண்பது தொடக்கம் இன்றுவரை ஈழத்துச் சிறுகதைகளின் முக்கிய பொருளாகின்றன. இவ்விதத்தில் புகலிடச் சிறுகதைகள் நமது கவனத்தை ஈர்க்கின்றன. புகலிட நாட்டுத் தமிழரது அனுபவங்கள் ஈழத்துச் சிறுகதைப் பரப்பினை வலுப்படுத்தின, வளம் சேர்த்தன. புகலிட நாடுகளின் தொழிலனுபவங்கள், குடும்பப் பிரச்சினைகள் அகதியம், அந்நியம், நிறபேதம், தனிமனித ஒழுக்கப்பிறழ்வுகள், பூண்பாட்டு முரண்பாடுகள் முதலியன தமிழ்ச் சிறுகதைகளிலிடம் பெற்றதுமட்டுமன்றி அவை ஏனைய புகலிட நாடுகளில் வாழ்ந்த அகதிகள் வாழ்க்கைப்

பிரச்சினைகளாக அமைந்தமையால், மூன்றாம் உலக நாட்டு மக்களின் குரல்களாகவும் ஒலித்தன. இவ்விதத்தில் ஈழத்துச் சிறுகதை தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிப் போக்குடன் இரண்டாவது முறையாகச் சங்கமித்துக் கொள்கின்றது. அத்துடன் மூன்றாம் உலக நாடுகள் சிறுகதைப் போக்கு டனும் ஓரளவு இணைந்து கொள்கின்றது.

ஈழத்துச் சிறுகதைகளில் இக்காலப் பகுதியில் பெண்நிலைவாதம் அழுத்தம் பெறத் தொடங்கியதும் புகலிடச் சிறுகதைகளூடாகவேதான். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் இவ்விதத்தில் முக்கியமானவர்.

ஆக, இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் போது ஈழத்துச் சிறுகதைகள் உள்ளடக்க ரீதியிலே அவ்வக் காலத்தின் குரல்களாக வெளிப்பட்டுள்ளன என்பது உண்மைதான் ஆயினும் அக்குரல் கள் பலகுரல்களுமல்ல. அதாவது இன்னமும் பலபிரதேசங்கள் - எடுத்துக் காட்டாக திருமலையும், மன்னாரும். நீர்கொழும்பும் - ஈழத்துச் சிறுகதை களில் போதியளவு இடம் பெறாமை நாமறிந்ததே!

இனி இன்னொரு முக்கியமான கேள்வி எம்முன் நிற்கின்றது. வெளிப்பாட்டு ரீதியில் ஈழத்துச் சிறுகதைகளின் நிலை எங்குள்ளது? இவ்விதத்தில் பின்வரும் அம்சங்கள் கவனிப்புக்குரியன:

i. ஈழத்துச் சிறுகதைகளில் சம்பவக்கோர்வைகளும் கதை கூறுதலும் முனைப்புற்றநிலை எழுபதுகளிலிருந்து ஓரளவு மாறத் தொடங்கியது. பதிலாகப் பாத்திரங்களின் மன உணர்வுகளுக்கு முக்கியம் கொடுத்து எழுதும் போக்கு ஆரம்பிக்கிறது. எழுபதுகளின் பிற்கூறுகளில் அ. யேசுராசா, உமாவரதராஜனும், தொண்ணூறுகளில் திருக்கோவில் கவியு வனும் அண்மையில் கௌரிபாலனும் ராஜ்கபூரும் இதற்கு எடுத்துக் காட்டுகளாகின்றனர்.

ii. பிரச்சாரத்திற்கும், செயற்கைத் தன்மைக்கும், விவரணப்பதிவிற்கும் மாறாக கலையழகுடன் எழுதும் போக்கும் எழுபதுகளிலிருந்து தொடங்கு கிறது. எ-டு முற்போக்கு அணிசார்ந்தவருள் நந்தினி சேவியர். அவ்வணி சாராதவருள் எஸ். எல். எம். ஹனிபா.

iii. சமகாலப் பிரச்சினைகள் குறிப்பாகத் தமிழ்த்தேசியவாதம் கலை யழகுடன் சித்தரிக்கப்படுவது எண்பதுகளிலிருந்து தொடங்குகிறது எ.டு ரஞ்சகுமார்.

iv. மொழிநடைரீதியில் தொண்ணூறுகளிலிருந்து ராஜகபூர். றஊப் குமார்மூர்த்தியூடாக மாற்றம் ஏற்படுகிறது.

v. சிறுகதை அமைப்பு ரீதியில் மாற்றம் காண்பது (எழுபதுகளில் சாந்தன்) தொண்ணாறுகளில் புகலிட எழுத்தாளர்களுள் பார்த்தீபன். சுகன், ஷோபா, சக்தி முதலானோரின் ஒரு சில படைப்புகளூடாகவே.

எவ்வாறாயினும் வெளிப்பாட்டு ரீதியிலான மேற்கூறிய மாற்றங்கள் பரவலாக ஏற்பட்டவையல்ல. திருப்திதரக் கூடியவையுமல்ல. தமிழ்நாட்டுடன் ஒப்பிட்டு நோக்கும்போது மிக அதிருப்திக்குரியன என்பதே ஜீரணிக்க வேண்டிய கசப்பான உண்மை ஆகின்றது. நடுநிலைநின்று திறந்த மனத்துடன் சிந்திக்கும் போது இது மேன்மேலும் உறுதியாகின்றது. எனவே இதுபற்றி தீவிரமாகச் சிந்திப்பது ஈழத்து ஆய்வாளரதும் படைப் பாளரதும் ஆர்வலரதும் உடன் தேவையாகின்றது என்பதில் தவறில்லை.

நம் உடம்பிலோ எல்லா நோயும் இருக்கும். 'ஒன்றுமே இல்லை' என்று நம்பும் முட்டாள் ஆரோக்கியமாக இருக்கிறான். ஒரு நோயும் இல்லாமலேயே ஒவ்வொரு மயிர்க்காலையும் பார்த்து 'இது அதுவாக இருக்குமோ' என்று ஆராய்ச்சி செய்கிற அறிவாளி நித்திய நோயாளியாகிச் சாகிறான்.

(கவியரசு)

## மலர் மனிதருக்கு....

மணம் கமழும்

அழகான மலராக

விரிந்து மலர்ந்து

காற்றில் கலந்து

பின்னர் வளம்தந்த

மண்ணில் மடிந்து

அவன்பாதம் சேர்வதே

என் விருப்பும்

அவன் சித்தமும்

ஓ மனிதா!

உன் குற்றம் மறைக்க

பாவம் குறைக்க - மறை என

அவனையும் ஏமாற்ற

மலரை பறிக்காதே

மரத்தை திருடாதே

இயற்கை அன்னையை வதைக்காதே

வளம் தர வாழ்ந்து

மடிந்து மகிழ்ச்சி காண்

ஹென்றி விக்றர்

18. 04. 1999

# இடைவிட்ட இயக்கம்?

எதிரேயுள்ள
மின்சார விசிறிபோல்
பள்ளிகூட
என்வாழ்க்கையும்
நின்று சுழல்வதாயிற்று
எனக்கு
இயக்கமிருந்தபோது
மின்சார
இயக்கமறுந்தது
மீண்டும்
மின்சார
தொடர்புகள்
ஏற்பட்டபோது
இயக்கவிசை செயலிழந்தது
அப்போது
அரசவானொலி அறிவித்தது
மின்னேரியாப் பகுதிக்கான
மின்வெட்டு
இன்னும் சில மாதங்கள்
நீடிக்கலாமென்று
அப்படியானால்
அந்த விசிறியைப்போல
என்நிலையும்
இடைவிட்ட
சுழற்சிதான்? ? ?

16. 02. 99

அழகுகிருபா
மொழித்துறை



# நாஸ்

(உருவகக் கதை)

N.M. அன்சார்
(மொழித்துறை)

நிமிர்ந்திருக்கும் அந்த பங்களாவின் முன் புதிதாக வாங்கிய மோட்டார்சைக்கிள் உறுமலுடன் வந்து நின்றது. அதில் இருந்து இறங்கிய அந்த உரிமையாளன் வேலைக்காரனை அழைத்து தம்பி இந்த வண்டியில் தூசி படிந்திருக்கிறது. சுத்தப்படுத்திவிடு. என்று கூறிவிட்டு உள்ளே சென்றான். வேலைக்கானால் சுத்தப்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மினுமினுக்கும் தன் உடலைப் பெருமிதத்துடன் ஒருமுறை பார்த்துக் கொள்கின்றது. பக்கத்து அறையில் அநாதரவாகக் கிடந்த துவிச்சக்க ரவண்டி அதன் கண்ணில் பட்டது. அதனை வம்புக்கிழுக்கும் நோக்குடன் மோட்டார் சைக்கிள் பேசியது. "ஏய் சோம்பேறிப் பயலே! என்ன அசிங்கத்துடன் இங்கே கிடக்கிறாய். இந்த அறையில் நீ இருப்பது எனக்குப் பெரிய அவமானமாய் இருக் கின்றது. இந்த வீட்டின் அழகைக் கெடுக்காமல் எங்கேயாவது போய்த் தொலை " என்றது.

அதைக் கேட்டும் கேளாதது போன்று துவிச்சக்கர வண்டி அமைதி யாக இருந்தது. பின் மோட்டார் சைக்கிள் அதனை வம்புக்கு இழுத்தது. "ஏய் என்ன மௌனியாகி விட்டாய்! உன்னைப் பற்றி பேச எனக்கே வெட்கமாய் இருக்கின்றது. நீயோ யாருக்கும் பிரயோசனம் இன்றி இருக் கிறாய். என்னைப்பார் நான் எவ்வளவு அழகாய் இருக்கின்றேன்." என்றது.

இவையாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த துவிச்சக்கர வண்டி. அமையாகப் பதில் சொன்னது. "அண்ணா, ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொருவரது வாழ்வு சிறந்திருப்பது உலக நியதி. ஒருகாலத்தில் நன்றாக இருந்தவர்கள் இன்னொரு காலத்தில் கவனிப்பாரற்று இருக்கலாம். அதே போன்ற கைவிடப்பட்டவர்களும் கௌரவிக்கப்படலாம்." என்று கூற மோட்டார்சைக்கிள் இடைமறித்துப் பேசியது "சோம்பேறிப்பயலே! உன் இடத்தில் இருக்கும் தவறை மறைக்க நியாயம் வேற பேச ஆரம்பிச்சிட்டியா! என்னைப்பார். எவ்வளவு வேகமாக ஓடுகின்றேன்" என்றது. மீண்டும் துவிச்சக்கரவண்டி பேசியது. "அண்ணா! நீங்கள்

சொல்வது உண்மைதான் ஒரு காலத்தில் உங்களைப் போலத்தான் என்னையும் இந்த வீட்டார் செல்லமாக வைத்திருந்தார்கள். எனது எஜமான் அங்கும் மிங்கும் எடுக்தோடினார். ஆனால் நான் எதிலும் உங்களைப் போல் ஆவேசமாகவும் வேகமாகவும் இயங்கவில்லை. நிதானமாகவே நடந்து கொண்டேன். இதனால் தான் உங்களை எனது எஜமான் கொண்டு வந்தார் அண்ணா! எதனையும் பிரயோசனமற்றது என்று கூறமுடியாது என நிதானப் போக்கின் காரணமாக எஜமான் என்னைக் கைவிட்டார். சிலவேளை உங்களையும் அவர் கைவிட்டாலும் கைவிடலாம்" என்றது. துவிச்சக்கரவண்டியின் பேச்சைக் கேட்டு மோட்டார்சைக்கிள் சீறிப்பாய்ந்தது" ஏய் பயனற்ற சோம்பேறிப்பயலே! என்ன தைரியத்துடன் என்னுடன் எதிர்த்துப் பேசுகிறாய்! உன்னை இங்கு வைத்திருப்பதே பெரியதவறு" என்றது. துவிச்சக்கரவண்டி அமைதியாக இருந்தது. இரண்டு வாரங்கள் சென்றன. ஒரு நாள் அவ்வீட்டு எஜமான் மோட்டார் சைக்கிளை தள்ளிக் கொண்டு வந்து அங்கே போட்டான். அதன் பல பகுதிகள் அடிபட்டு நொறுங்கியிருந்தன. எஜமான் உடலிலும் பலகட்டுகள் போடப்பட்டு இருந்தன. கோபத்துடன் வேலைகாரனை அழைத்துச் சொன்னான்" தம்பி இந்த மோட்டார் சைக்கிளை அங்கே கொண்டு போய்ப் போடு. வேகமாய் இயங்கலாம் என்று ஆயிரக்கணக்கில் செலவு செய்து இதனை வாங்கி னேன். ஆனால் அதன் நிதானமற்ற வேகத்தினால் நான் பாதையில் தவறி விழுந்து விட்டேன். நல்ல வேளை உயிர் தப்பினேன்." என்ற கூறியபடியே "தம்பி! அந்தத் துவிச்சக்கரவண்டியை வெளியே எடுத்துவை அது வேகத்தில் குறைவாக இருந்தாலும் நிதானத்துடனும் சுய கட்டுப்பாட்டுடனும் பயணம் செய்யக்கூடியதாய் உள்ளது! மோட்டார் சைக்கிள் எவ்வளவு வேகமாய் இயங்கினாலும் நிதானம் இல்லாவிட்டால் என்ன பயன்" என்றார்.

எஜமானின் பேச்சைக் கேட்டு மோட்டார் சைக்கிள் வெட்கத்துடன் தலைகுனிந்து. கொண்டது. ஆனால் துவிச்சக்கரவண்டி அண்ணா ஒவ்வொருவரும் மற்றவைர உணராமல் நடப்பது இயற்கைதான் எனினும் ஒன்றைப் பார்த்தவுடன் என்னை ஒதுக்கி வைத்திருந்த எஜமான். இப்போது என் பயனை உணர்ந்துள்ளார். எதிலும் நிதானம் வேண்டும் என்பதை இப்போதாவது உணர்ந்தீர்களா" என்று அமைதியுடன் கூறியது.

மூலையில் விழுந்து கிடந்த மோட்டார் சைக்கிள் உண்மையை உணர்ந்து கண்ணீர் விட்டது.

# சமரே.... ஓய்ந்து போ

சமரே........ஓய்ந்து போ........
அட்டையாய் ஒட்டிக் கொண்டு
எம்மை உறிஞ்சியது போதும்
சமரே........ ஓய்ந்து போ.....

ஆயுள் முடியும் முன்னே
எம் ஆவிகள் பறிக்கப்படுவதும்
ஆயுத சாம்ராஜியத்தின்
அடிமைகளாய் நாம் வாழ்ந்ததும்
போதும் சமரே.......ஓய்ந்து
போ............

உன் அகல விரிந்த
கைகளுக்கிடையே எம்மை
மட்டும் ஏன்? இறுக்கி
கொல்கிறாய்

உன் தாகம் தீர்க்க
வரண்ட எம் விழிகளை
இன்னும் கீறி பார்க்காதே

அடக்குமுறை எனும் அதிகார
கோல் கொண்டு தட்டித் தட்டியே
எம்மை தலைகுனிய வைத்தது
போதும் சமரே.........ஓய்ந்து
போ.........

வெளிச்சத்தை ஒழித்து வைக்கும்
இருளை போல் எங்கள்
உள்ளத்தில் உறைந்து
போன ஆதங்கங்கள்
மனநோய் ஆடைக்குள்
எம்மை இழுத்து கொள்ளும்
முன் சமரே......ஓய்ந்து
போ........

விடலைகளை விறகுகள்
ஆக்கி நீ குளிர்காய்ந்தது
போதும், சமரே.....ஓய்ந்து
போ......

கொட்டும் மழையிலும்
வாட்டும் பனியிலும்
மொட்டுகள் உதிர
பட்டு போன எம்
வாழ்வு துளிர்க்க வேண்டும்
சமரே.........ஓய்ந்து போ......
இனிவரும் காலங்களிலாவது
நாம் இன்பத்தை நுகர வேண்டும்
சமரே......
ஓய்ந்து........போ.......

பழனிவேல் யாழினி

# சமாதானமே ச.மாதா வே!

போர் எனும்
போர்வையை
உடுத்தியிருக்கும் சமாதானமே!

உன்
மானத்தைக்
காப்பதற்கு
வேறு உடை
இப்பூவுலகில் இல்லையா?

என்
பள்ளிக் கூட
வெள்ளைச் சட்டையை
உனக்குத் தருகிறேன்

போரைக் களைந்து எறி
இனியும்
செம்மணிகளில்
என் தாயையும்
தந்தையம்
ஏன் என்னையும்
புதைத்துவிட்டு
தடயங்களையும் அழித்துக்
கொண்டிராத!

பூவை கிருஷ்ணபிரியா
கல்முனை

# நோயற்ற வாழ்வு

01. இரத்தமூலம்

பிரண்டைக் கொழுந்தை எடுத்து சிறிது (பசுவின்) நெய் விட்டு வறுத்து அரைத்து காலையிலும் மாலையிலும் வெறும் வயிற்றிலே கொட்டைப் பாக்களவு சாப்பிட வேண்டும் மூன்று நாட்களில் இரத்த வாந்தி குணமாகும்.

02. நீர்க்கடுப்பு

50g செம்பருத்திக் கொழுந்தையும் 5 செம்பருத்திப் பூவையும் ஒரு லீற்றர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து 1/4 லீற்றர் ஆக வற்ற விட்டு வடிகட்டி ஒரு பாத்திரத்தில் எடுத்து இரண்டு அவுன்ஸ் அளவு காலையும் மாலையும் வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் நீர்க்கடுப்பு குணமாகிவிடும்.

03. வயிற்றக்கடுப்பு

மாதுளம் பூவின் சாறு ஒரு அவன்ஸ் எடுத்து அரை அவுன்ஸ் தேனும் விட்டு சாப்பிட்டால் வயிற்றுக் கடுப்பு நின்று விடும்.

04. வயிற்றுப் புண்

பசளைக்கீரையை பருப்பிட்டுக் கடைந்து தினமும் சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் புண்மாறிவிடும்.

05. இரத்த வாந்தி

ஆலம் விதையையும் அரசம் விதையையும் சம அளவில் எடுத்து பசும் பாலில் அரைத்து பசும் பாலிலே கலக்கி சாப்பிட்டால் இரத்த வாந்தி நின்று விடும்.

06. பல்வலி

கொய்யா மரத்தின் கொழுந்தை வாயில் போட்டு மென்று அந்த சாற்றை வலியுள்ள பக்கமாக ஒதுக்கி அழுத்திக் கொண்டால் வலி உடனே நிற்கும்.

07. வாய் நாற்றம்

இந்த நோய் உள்ளவர்கள் மலச்சிக்கலை போக்கி கொள்ள வேண்டும். மற்றது ஒரு மடங்கு எலுமிச்சம் பழச்சாற்றுடன் இரண்டு மடங்கு பன்னீர் கலந்து காலையிலும் மாலையிலும் வாய் கொப்பளித்து வந்தால் வாய் நாற்றம் அறவே நீங்கி விடும்.

08. தொண்டைவலி

நன்கு பழுத்த வில்வம் பழத்தை சாப்பிட்டால் தொண்டைவலி இல்லாமல் போய் விடும்.

**S.P. நாதன்**

கி. ப. கழகம்

# வித்தகன் விபுலானந்தன்

01. இலங்கை மணித்திருநாடு - ஈன்ற
இலங்கி துலங்கி விளங்கிய பேரில்
கிழக்கிலங்கைத் தலைநகர் - தெற்கே
விளங்கு ஈர்ப்பதிநான்கு கல் தொலைவில்
காரேறு மூதூரெனும் காரைதீவில் - கல்வி
சேருபுகழ் சாமித்தம்பி என்பார்
காதலுற கண்ணம்மையாரோடு - நாடி
மன்றல் செய்து மருவிய காலை

02. கரஆண்டு வைகாசித் திங்கள்
நிறை ஆங்கில மூன்றாம் நாள் காலை
வீரத்தமிழ்த் தாய் வயிற்றில் வந்து
தீரத் தெய்வருள் பெற்ற சீலன்
சூரத்தனம் சிறிதுமற்ற - சுந்தர
வீரத்தமிழ் குலமோங்கி வளர
உதித்தனன் இளஞாயிறு விபுலன்
வைத்தனர் பெற்றோர் மயில்வாகனன் நாமம்

03. கற்றவர் புகழ் கல்வி - கற்று
நற்றமிழ் நலனுறு ஆங்கிலறிவு பெற்ற
மட் / புனித மிக்கேல் கல்லூரியில் - கற்பித்து
திட்டமுடன் தமிழ் சைவம் வளர்த்து
பல்கலைக்கழகம் பலதில் - நிறை
நற்பணி ஆற்றிப் போற்றிடும் வேளை
கற்றார் பலமொழி நூல்கள் அப்போ
பயிற்று வித்தார் தன்னை துறவியதாக

04. துறைவிட்டு கடலது தாண்டி - அங்கே
கறையற கற்று சொற்பொழிவாற்றி
இருபத்தாறு வயதில் இராமகிருஷ்ண - மிஷனில்
குரு சர்வானந்தர் சேர்ந்து, துறவு பூண்டு
விரதம் காத்து பிரபோதசைத்தன்யர்- ஆக
விபுலானந்த நாமத்தை சிவானந்தரிட்டார்
இந்தியாவில் பல தொண்டுகள் - இயற்றிய
விந்தை கண்டு மக்கள் வியந்து போற்றினர்

05. சுதந்திர தாகமூட்டிய பாரதி - பாடல்
சுதிமுறை தவறிய தென்று தூற்ற
இசைகொண்டு பாடிட வைத்து - மக்கள்
வசைமின்றிப் போற்றிட வைத்து விபுலன்
போதைக்கவிஞனெனும் நாமம் ஓட்டி - பாரில்
மேதைக் கவிஞனெனும் நாம் சூட்டி மெய்ப்பித்தார்
சேக்ஸ்பியர் நூல்திறம்படக் கற்று - போற்றும்
மதங்கசூளாமணி மணங்கமளப் படைத்தார்

06. ஆங்கிலவாணி, பூங்சோலைக் காவலனோடு - பல
பாங்குறு விவேகானந்த நூல்கள் மொழி பெயர்த்து
"பாரதிபுத்திர" ஆங்கில இதழாசானுமாகி - கலை
அறிவுத் துறைகளிலே ஆதவனானர்
யாழ் பல வாய்ந்து அதில் தேர்ந்து - உயர்
யாழ்நூல் படைத்தார் நாடது போற்ற
விபுலன் இலக்கியம் விடிவெள்ளியாகி - விலை
செப்பமுடியாத விற்பன்னர் திலகமுமானார்

07. தமிழோடு சைவ இலக்கிய - சேவை
தரணியில் ஆற்றிய விபுலனின் புகழை
பாமலர் கொண்டு மாலைதாக்கி - களித்து
நாமவர் கழுத்தில் சூடி மகிழ
வேளைவையாது காலன் கவர்ந்த - அந்த
நாளது ஆண்டு நாற்பத்தியேழு
ஆடித்திங்கள் பத்தொன்பது ஊரே
கூடிக்கண்ணீர் ஆறாய்ப் பெருக்கின

08. ஆண்டு நூற்றொண்டு ஆகியும்- உங்களை
ஈண்ட ஈழத்திரு நாடு இன்றும்
ஊருகள் தோறுமுன் நினைவாகக் - கூடி
விருப்புடன் விழாக்கள் எடுக்கின்றார் என்றால்
மனத்திரை விட்டு மறவாது - தங்களை
நினைத்திருக்கின்றார் நிச்சயம் நன்றாய்
வானொடு வையகமுள்ள வரைக்கும் - உங்களை
மனக்கோயிலிலேற்றி போற்றியிருப்போம்.

ஆரையூர் அருள்

# கை வைத்தியம்

எமக்கு அடிக்கடி ஏற்படும் சிறிய வியாதிகளுக்கோ, வலிகளுக்கோ நாம் உடனேயே பொருத்தமென்று நினைக்கின்ற ஏதாவது மாத்திரைகள், அல்லது வில்லைகளை உட்கொள்கின்றோம். ஆனால் இவை தற்காலிக சுகத்தை தருகின்ற போது பரிகாரத்தை நிறுத்திக் கொள்கின்றோம். இவ்வேளையில் எம்மால் தயாரிக்கக் கூடிய எத்தனையோ தரமான கைம்மருந்துகள் இருந்தும், நாம் அவற்றைப்பற்றி சிந்திப்பதில்லை. அனைவருக்கும் ஏற்படக்கூடிய காச்சல், சளி, தடிமல், இருமல், தொண்டைக் கரகரப்பு, தேகவலி, தலைவலி போன்ற இன்னும். எத்தனையோ நோய்களுக்கு நாம் கீழே குறிப்பிடும் கலவையை பாவித்து பக்கவிளைவுகள் ஏதுமற்ற சிறந்த பலனைப் பெறலாம்.

தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| ஊறள் பக்கட் | - 1 |
| கொத்தமல்லி | - 1 கைப்பிடி |
| இஞ்சி | - சிறிய துண்டு |
| வெ. பூடு | - 1புரி |
| வெண் துள்சி இலை | - 1கைப்பிடி |
| கரும் துளசி இலை | - 1கைப்பிடி |
| தூது வளை இலை | - 1கைப்பிடி |
| கற்பூரவள்ளி இலை | - 5 |
| கொடிமுந்திரிகை வற்றல் | - 25 கிராம் (பிளம்ஸ்) |
| மிளகு | - 4 |

செய்முறை

ஊறள் பக்கட்டில் உள்ள அனைத்து பொருட்களுடன் கொத்தமல்லியையும் சேர்த்து நன்றாக இடித்துக் கொள்ளவும், இஞ்சை சிறிது சிறிதாக நறுக்கிய பின்னர் எல்லாப் பொருட்களையும் ஒன்றாக சேர்த்து 2 கப் தண்ணீருடன் ஒரு பாத்திரத்தில் இட்டு அவித்தல் வேண்டும். 1 கப் தண்ணீர் அளவு வரும் வரை அவித்த பின்னர் வடிகட்டி 2 மேசை கரண்டி தேன் விட்டு காலை மாலை இரண்டு வேளை பருகவேண்டும். கலவையை வீசாது அடுத்த தடவை இதே போன்ற தண்ணீர் விட்டு அவித்து வடிகட்டி பருகவும்.

அ.தேவராஜ்
மிருக விஞ்ஞானவியல் பகுதி

# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் அறுபதுகள் - ஒரு நோக்கு

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியை நோக்கும் போது ஏறத்தாழ 1956ம் ஆண்டு தொடக்கம் 1960 களின் பிற்பகுதி வரையிலான காலகட்டம் அதிக முக்கியத்துவம் வாய்ந்த கால கட்டமாக தென்படுகின்றது. ஏனெனில் இக்காலப்பகுதியில் ஈழத்துச் சிறுகதைத் துறையானது வளர்ச்சி பெற பல காரணங்கள் ஏதுவாக அமைவதோடு பல மாற்றங்களும் வளர்ச்சியும் பெறுவதனையும் காணலாம். அந்த வகையில் இக்கட்டுரையானது ஏதுவாய் அமைந்த அக்காரணங்களையும் அவற்றினால் இக்காலப்பகுதியில் சிறுகதைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் வளர்ச்சி முறைகளை எடுத்துரைப்பதாகவும் அமையும்.

இக்கால கட்டத்தில் அதிகமான சஞ்சிகைளின் தோற்றமும் சிறுகதைத்துறை மாற்றம் பெற்று வளர்ச்சியடையக் காரணமாக அமைகின்றன. மலையகச் சிறுகதைகளை வளர்த்தெடுக்கவென **"மலைமுரசு"** (1960) சிறப்பாக செயற்பட்டமையும், டொமினிக் ஜீவாவின் **"மல்லிகை"** இக்கால கட்டத்திலே (1964) தோற்றம் பெற்று சிறுகதைத் துறைக்கு வளமூட்டியமையும், ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் மூவரான கதி. சம்பந்தனின் ஐந்து சிறுகதைகளை சேர்த்து **"விவேகி"** சஞ்சிகை வெளியிட்டமையும், அ. செ. முருகானந்த னின் நூறுக்கு மேற்பட்ட சிறுகதைகளை **தினகரன், சுதந்திரன், தேசாபிமானி, பாட்டாளி, பாரதி, மல்லிகை** முதலிய பல பத்திரிகைளும் இக்காலப் பகுதியில் பிரசுரித்தமையும் தெளிவாகத் தெரிகின்றது. இத்தன்மைகளால் சிறுகதைத்துறையானது புதுப்பொலிவு பெற்று விளங்கியது.

இதே காலகட்டத்தில் சிறுகதைப் போட்டிகள், பரிசில்கள், கௌரவிப்புகள் என்பவைகள் நிகழ்ந்தமையும் சிறுகதை வளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்தன. பரிசில்கள், கௌரவிப்புகள் பெறுவதற்காக பலர் போட்டிகளில் பங்கெடுக்கின்றனர். இது சிறுகதைத்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றகளை ஏற்படுத்துகின்றன. **வீரகேசரி, ஈழகேசரி** போன்ற பத்திரிகைள் சிறுகதைப் போட்டிகளை நடாத்தின. கடல்கடந்து நடாத்திய (கல்கி) போட்டிகளிலும் திருச்செந்தூரன் போன்றோர் பங்குபற்றி பரிசுகளும் எடுத்துள்ளனர்.

சாகித்திய மண்டலப் பரிசுகளும் இக்காலப் பகுதியிலேயே (1962) கொடுக்கப்படத் தொடங்குகின்றன. 1962ல் சாகித்திய பரிசு கிடைத்த ஆறு நூல்களில் ஒன்றாக வ.அ.இராசரத்தினத்தின் "**தோணி**" எனும் சிறுகதைத் தொகுப்பும் காணப்படுகின்றது. இதனை "**ரீடேர்ஸ்டையஸ்ட**" மறுபிரசுரம் செய்ததோடு ஆசிரியரையும் கௌரவித்தது. சாகித்திய மண்டலப் பரிசு சிறுகதைத் துறைக்கு இக்காலத்திலேயே (1962 தோணி) கிடைத்தது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இக்காலகட்டத்தில் இடம் பெற்ற எழுத்தாளர் மகாநாடுகளும், கருத்தரங்குகளும், இலக்கிய நெறிப்பாடு பற்றிய கருத்து மோதல்களும் திறனாய்வுகளும் இக்காலப் பகுதி சிறுகதைகளின் வளர்ச்சி மாற்றம் என்பவைகளுக்கு ஏதுவாக அமைகின்றன. 1962 ஏப்ரல் 28ம், 19ம் திகதிகளில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர்சங்கம், கொழும்பு சாஹிராக் கல்லூரியில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்கான முதல் "**மாநாடு**" இக்கால கட்டத்திலேயே இடம் பெறுகின்றன. இம்மாநாடு ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு மட்டுமன்றி ஈழத்துத்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பங்காற்றியுள்ளன. என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

சிறுகதை பற்றிய கருத்து மோதல்கள் மிகவும் சிறப்பாக இடம் பெற்றன. கா. சிவத்தம்பி க.கைலாசபதி போன்ற மாக்ஸிச திறனாய் வாளர்கள் ஒரு புறமாகவும் எஸ்.பொ.மு. தளையசிங்கம், போன்றவர்கள் மறுபுறமாகவும் நின்று சிறுகதைகள் பற்றிய உருவம் உள்ளடக்கம் குறித்து கருத்து மோதல்களைச் செய்தனர். அத்தோடு தமிழ் நாட்டி லிருந்து ஈழத்துக்கு பகீரதன், நா. பார்த்தசாரதி கி. வ. ஜகந்நாதன் ஆகியோர் வருகை தந்து பலகருத்தரங்குகள் செய்தனர். அவை போன்ற காரணங்களால் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் முக்கியமான தொரு திருப்புமுனையை ஏற்படுத்தின இக்காலமே என்பர்.

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் சிறுகதைத் தொகுப்புக்கள் இக்காலத்திலேயே வெளியாகக் தொடங்குகின்றன. ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவரான இலங்கையர் கோனின் "**வெள்ளி பாதசரம**" இக்காலப் பகுதியிலேயே தொகுப்பாக வெளிவருகின்றது. கதி. சம்பந்தனின் ஐந்து சிறுகதைகள் ஒன்றாக தொகுத்து வெளியிடப் படுகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சுயபாஷைக் கல்வியின் காரணமாகவும் பல தொகுப்புக்கள் வெளிவருகின்றன. அத்தோடு கனக. செந்திநாதனின் "**வெண்சங்கு**" சொக்கனின் "**கடல**" சு. வேலுப்பிள்ளையின் "**மண்**

**வாசனை**" தாழையடி சபாரத்தினத்தின் "**புதுவாழ்வு**" போன்ற பல தொகுப்புக்களும் இக்காலப்பகுதியிலேயே இடம் பெறுகின்றன. மொத்தமாக இக்காலப்பகுதிக்குள் (1956 - 1969) 56 சிறுகதைத் தொகுப்புக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதற்கு முன்னர் ஒரேயொரு தொகுப்பு மாத்திரமே வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்காலபகுதியிலேயே பெண் எழுத்தாளர்கள் பலரும் சிறுகதைத துறைக்குள் நுழைகின்றனர். **குந்தவை, குறமகள், பாலேஸ்வரி, பவானி ஆழ்வாப்பிள்ளை** போன்ற சிலரை இக்காலத்தில் நுழைந்தவர்களுக்கு உதாரணமாகக் கொள்ளலாம். இவ்வாறு பெண்கள் நுழைந்ததனால் பெண்ணியல் சார்ந்த கருத்துக்கள் அதுவும் பெண்களாலேயே கூறப்படத் தொடங்கிய காலமும் இதுவே என்பதில் சந்தேகமில்லை.

இழிசனர் இலக்கியம் என மரபு வாதிகளால் கூறப்பட்டு வந்த சிறுகதைத்துறையை மீட்டெடுத்து இலக்கிய நிர்ணயத்தைக் கொடுத்தும் இக்காலமே. உருவம் உள்ளடக்கம் சார்ந்து நின்று திறனாய்வு செய்த மு. தளையசிங்கம், எஸ். பொ மற்றும் கா. சிவத்தம்பி, க. கைலாசபதி போன்றோரின் காத்திரமான கருத்து மோதல்களின் மத்தியில் மரபு வாதிகள் இழிசனர் இலக்கியம் எனக் கூறுவதிலிருந்து பின்வாங்கினர். இதனால் சிறுகதை இலக்கியத்தில் பலர் ஈடுபடத் தொடங்கினர் சிறுகதைத்துறை இன்னொரு வளர்ச்சிக்கட்டத்திற்கும் சென்றது.

இதனைத் தொடர்ந்து தேசிய இலக்கியம், மண்வாசனை இலக்கியம், யதார்த்த இலக்கியம் என்ற கருத்துக்களும் சிறுகதைத் துறையில் வலுவடையத் தொடங்குகின்றன. இதற்கு 56களில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் ஏதுவாக அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். நமது மக்கள் நமது பிரச்சினை நமது கலாசாரம், நமது மொழி என்ற உணர்வு தமிழ் எழுத்தாளர்களிடையே ஏற்படுகின்றன. இதனால் தேசிய இலக்கியங்களைப் படைக்கத் தொடங்குகின்றனர்.

அதற்கமைய மண்வாசனை. பேச்சோசை போன்ற பிரதேசப் பண்புகள் நிறைந்த சிறுகதைகளும் தோற்றம் பெறுகின்றன. எஸ். பொ. வ. அ. இராசரெத்தினம் ஆகியோரின் **புதுயுகம் பிறக்கிறது** "**தோணி**" என்பன சிறந்த உதாரணங்களாகும்.

மு. தளையசிங்கம் போன்றவர்களால் பிரபஞ்ச யதார்த்தவாதச்

சிறுகதைகள் தோற்றுவிக்கப்படத் தொடங்கியதும் இக்காலமே அந்த வகையில் ஆத்மார்த்தப் பண்பான சிறுகதைகளையும் இக்காலத்தில் காணமுடிகின்றது. இவ்வாறாக எஸ். பொ, மு. தளையசிங்கம் போன்றவர்களால் பல பரிசோதனை முயற்சிகள் சிறுகதைத்துறையில் ஏற்படுத்தப்படுகின்றன.

இக்காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களில் சுயபாஷைக்கல்வி கொண்டுவரப்படுகின்றது. இதன் காரணமாக பின்தங்கிய பிரதேசத்தவர் கீழ்நிலை கழகத்தவர்கள் என பலதரப்பட்ட நிலையினரும் உயர்கல்வி கற்கும் நிலை ஏற்படுகின்றது. அதனால் பல பிரதேசங்களிலிருந்து பலர் சிறுகதைத்துறையில் ஈடுபடும் வாய்ப்பும் எழுகின்றது. செ. யோக நாதன், பெனடிக்றபாலன், செ. கதிர்காமநாதன். முத்துசிவஞானம் போன்ற வர்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள் இப்பல்கலைக்கழக சுய பாஷை கல்விமுறையின் அறிமுகத்தில் பலசிறுகதையாளர் தோற்றம் பெற்றது மட்டுமன்றி பல தொகுப்புக்கள் கலந்துரையாடல்கள் திறனாய்வுகள், விமர்சனங்கள் என்பனவும் சிறுகதைத்துறை சார்ந்து எழுந்து மெருகூட்டின.

இதன் இன்னொரு பரிமாணமாக ஈழத்தின் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பிரதேசமெங்கம் முனைப்புப் பெறத் தொடங்குகின்றன. குறிப்பாக மலைநாடு, நீர் கொழும்பு, திக்குவலை. அனுராதபுரம், குருநாகல், மாத்தளை, மினுவாங்கொடை, பலாங்கொடை, இரத்தினபுரி போன்ற சிங்கள பிரதேசங்களிலும் கிளைபரப்பத் தொடங்கின. இதன் பயனாகத் தமிழச் சிறுகதையானது இன்னொரு தளத்திற்குச் செல்கின்றது. மாறுபட்ட உள்ளடக்கங்களைக் கொண்ட படைப்புக்கள் வெளிவருகின்றன.

பல சிறுகதையாளர்களும் உருவாகுகின்றார்கள். அவர்களைக்கூற நினைத்தால் பெரும் பட்டியலே வந்து சேரும். இவ்வாறு சிறுகதை எழுத்தாளர்கள் அதிகரித்ததன் விளைவாக பல இலக்கிய எழுத்தாளர் சங்கங்கள் தோற்றம் பெறத் தொடங்குகின்றன. இச்சங்கங்களும் சிறுகதைத் துறையை வளப்படுத்தத் தொடங்கின. மலையகத்தில் திக்குவலை எழுத்தாளர்சங்கம் மாத்தளை மக்கள் இலக்கிய வட்டம் என்பவை உதாரணங்களாகும்.

மட்டக்களப்பிலும் 1960 வரை எழுத்தாளர்சங்கம் எதுவும் தோன்றவில்லை. 1960ல் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தின் வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்ற எழுத்தாளர் சந்திப்பொன்றில் இதனை

எஸ். பொ.வலியுறுத்தியதைத் தொடர்ந்து பல இலக்கிய எழுத்தாளர் சங்கங்கள் தோற்றம் பெறத் தொடங்குகின்றன.

அதே போன்று 1953 அளவுகளில் தொடங்கப்பட்ட எழுத்தாளர் சங்கம் செயலற்றுப் போய்க் கிடந்து 1960களில் பல புதிய மாக்ஸிச எழுத்தாளர்களின் வருகையோடு மீண்டும் புத்தாக்கம் பெற்ற முற்போக்கு சஞ்சிகை காத்திரமான விமர்சனங்கள் எனச் செய்யத் தொடங்கியதோடு தேசிய இலக்கியம் என்ற கொள்கையை முன்னிறுத்தி ஏனைய பல பிரதேசங்களிலும் கிளைகளை அமைக்கத் தொடங்கியதும் இக்காலமே. இதனால் சிறுகதைத்துறையானது பரந்து பட்ட பிரதேசங்களிலும் வளம் பெற்றது.

குறிப்பாக மலையகம் ஈழத்துச் சிறுகதைத்துறையில் முக்கியமான தோர் இடத்தைப் பெறத் தொடங்கியகாலம் இதுவே. பல சங்கங்கள் சஞ்சிகைகள் போன்றன செழிப்புற்று விளங்கியதுமட்டுமன்றி மலையகச் சிறுகதை இலக்கியத்தின் **"பிதாமகன்"** என போற்றப்படும் என். எஸ். எம். இராமையா இக்காலத்தில்தான் ஈழத்து இலக்கிய உலகில் பிரவேசிக்கின்றார். அதனால் 1920களிலேயே மலையகத்தில் சிறுகதை இலக்கியம் தோற்றம் பெற்ற போதும் "புத்தொளி" பெறச் செய்த இரா மையா நுழைந்தகாலம் இதுவே இதனைக் கைலாசபதி கூறும் போது **"இலங்கை தமிழ் இலக்கியத்திற்கு மலையகம் புதிய ரத்தம் பாய்ச்சுகிறது"** எனக் கூறுகிறார்.

தலித் மக்களின் வாழ்க்கையை சித்திரிக்கும் அவர்களின் சிக்கல்கள், ஏக்கங்கள், சிந்தனைகள் என்பனவும் இக்காலத்திலேயே துளிர்விடத் தொடங்குகின்றன. குறிப்பாகத் தமிழ்நாட்டுச் சிறுகதைகளில் தலித்துகள் பற்றிய சிந்தனைகள் சிறுகதைகள் தொடங்க முன்னமே ஈழத்தில் துளிர்விட்டமை இக்காலத்திலேயே.

தமிழ் நாட்டு இலக்கிய ஆக்கங்கள் சஞ்சிகைகள் ஈழத்துக்கு இறக்குமதி செய்யபடத் கூடாதென்ற கோஷம் இக்காலத்திலேயே முனைப்புப் பெறுகின்றன. இதனால் ஈழத்துச் சிறுகதை மேலும் பல படிகள் வளர்ச்சி பெறுகின்றது. இக்காலத்தில் வேற்றுமொழிச் சிறு கதைகள் பல ஈழத்தவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன. அதனால் உலகின் சிறந்த பல சிறுகதைகளை பார்க்கவும் பயன் படுத்தவும் ஈழத்துச் சிறுகதையாளர்களால் முடிகின்றது இந்திய முற்

போக்கு எழுத்தாளர் "கிஷன் சந்தரின்" பல சிறுகதைகளை செ. கதிர்காமநாதன் மொழி பெயர்க்கிறார். "நான் சாகமாட்டேன்" "கொட்டும்பனி" போன்றவை அவற்றில் சில

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது அறுபதுகளில் பல சஞ்சிகைளின் தோற்றம் சங்கங்களின் செயற்பாடுகள், போட்டிகள், பரிசில்கள், கௌரவிப்புகள், மாநாடுகள், கருத்தரங்குகள், திறனாய்வு விமர்சனங்கள், கருத்து மோதல்கள் இவற்றின் பயனாக தேசிய இலக்கியம் மண் வாசனை யதார்த்தம் போன்ற பல போக்குகள் புதிய பிரதேசங்களிலும் சிறுகதைத்துறையின் புத்தொளிகள் அதன் பயனாக பல்வேறு எழுத்தாளர்களின் குறிப்பாக பெண், தலித் எழுத்தாளர்களின் வருகையும் தொகுப்புக்களும் மொழிபெயர்ப்புச் சிறுகதைகளின் தோற்றமும் ஏற்படுகின்றன. இவற்றினூடாகப் பல மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையானது அறுபதுகளில் பெற்று விளங்குகின்றது. இதனால் ஈழத்துத் தமிழ்ச்சிறுகதையின் வளர்ச்சியை நோக்கும்போது 1960கள் மறக்கமுடியாதளவு முக்கியம் பெற்று காணப்படுகின்றது.

**எஸ். மோசேஸ்,**
மொழித்துறை
(இறுதி வருடம்)

**நம் மூதாதையர் சேர்த்த சொத்தை நாம் அனுபவிக்லாம்! ஆனால் அவர்கள் சேர்த்த பாவத்தை நாம் ஏன் அனுபவிக்கக் கூடாது?**

(கவியரசு)

**வியர்வை வெளியேற வெளியேறத்தான் வியாதியும் வெளியேறுகின்றது.**

**செய்வினை திருத்தப்படலாம்**
**ஊழ்வினை திருத்த முடியாது.**

# மத்திய வங்கி (தொடர்ச்சி)

இதனால் அரச வங்கி வீதத்தைக் கூட்ட விரும்புவதில்லை வளர்ச்சியடைந்த நாடுகளில் அடைந்த வளர்ச்சியைப் பேணுவதனால் அங்கு பொதுவான பணநிரம்பல் ஒழுங்குபடுத்த வங்கிவீதம் ஒரு கருவியாகப் பயன்படுகின்றது. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வங்கிவீத மாற்றமானது பணநிரம்பல் கட்டுப்படுத்து வதில் பூரண வெற்றி கண்டுள்ளது. ஆனால் குறைவிருத்தி நாடுகளில் வங்கிவீதமாற்றமானது அவ்வளவு வெற்றியளிக்கவில்லை. என்றே சொல்ல வேண்டும். இலங்கை மத்தியவங்கி, பிரித்தானிய மத்தியவங்கி முறை யைப் பின்பற்றியதால் அங்குள்ள வங்கிவீத நடைமுறை பின்பற்றப்பட்டது. இதனால் 1950ம் ஆண்டு காலத் தொடக்கத்தில் 2 ½,% 1953இல் 3% ஆகிப்பின் 1955, 1956இல் 2 ½% ஆகி 1960இல் ஆடம்பரப் பொருட் களை இறக்குமதி தடைசெய்வதற்காக இது 2 ½% ஆகவும் 4% ஆகவும் 2% ஆகவும் பின்பற்றப்பட்டு

| | |
|---|---|
| 1965 - | 5% |
| 1968 - | 5 ½ % |
| 1970 - | 6 ½ % |
| 1977 - | 8 ½ % |
| 1979 - | 12% |
| 1981 - | 14% |

1977ம் ஆண்டில் ஏற்பட்ட துரித பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வங்கிவீதம் துரிதமாகக் கூட்டப்பட்டது. இது நாட்டின் சேமிப்பு மட்டங்களில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. எனவே வங்கிவீதமானது வணிக வங்கிகள் திரவத்தன்மை இழந்து மத்தியவங்கியிடம் கடன் பெறச் செல்லும் பொழுது மட்டுமே செயற்படும். இலங்கையில் எந்தச் சந்தர்ப் பத்திலும் வணிக வங்கிகள் தன் திரவத்தன்மையை இழக்கவில்லை. பெரும்பாலும் வர்த்தக வங்கிகள் அதிகளவு திரவத்தன்மையைக் கொண்டிருக்கிறது எனலாம். எனவே வங்கிவீதம் நடைமுறைமூலம் இலங்கையில் பணநிரம்பல் கட்டுப்படுத்துவது சற்று தூரத்தில் இல்லை என்றே கூறலாம்.

## பகிரங்கச் சந்தை (நடவடிக்கை முறை)

மத்தியவங்கி அரச வங்கியாகத் தொழிற்படுவதால் அரசுக்கு

பணம் தேவைப்படும் பொழுதுதெல்லாம் ஆவணங்களைத் தயாரித்து வெளியிடுவதன் மூலம் பணத்தைப் பெற்று அரசின் பொருளாதார அபிவிருத்திக்கு பணம் வழங்குகின்றது. இந்த நிலைமை மத்திய வங்கி மேலும் பண நோட்டுக்களை வெளியிட முடியாத நிலையிலேயே நடைபெறுகின்றது. இப்படிப் பகிரங்கச்சந்தையில் ஆவணங்களை வெளியிடுவதால் இதை மக்கள், வணிக வங்கிகள் வேறு நிதிநிறுவனங்கள் கொள்வனவு செய்கின்றது. இதனால் பண நிரம்பல் சீராக்கப்படுகின்றது. இதற்கு மாறாக மத்தியவங்கி ஆவணங்களைக் கொள்வனவு செய்வதால் பணம் மக்களிடமும் வணிக வங்கிகளிடமும், வேறு நிதிநிறுவனங்க ளிடமும் செல்வதால் பணநிரம்பல் கூடுகின்றது. எனவே பகிரங்கச் சந்தை நடவடிக்கை மூலம் பணநிரம்பபலை மத்திய வங்கி சீராக்குகின்றது.

இந்தப் பகிரங்கச் சந்தை நடவடிக்கைமுறை சீராக இயங்க வேண்டுமெனின் வளர்ச்சியடைந்த பணச்சந்தை இருக்கவேண்டும். அதாவது வளர்ச்சியடைந்த ஆவணச்சந்தை இருக்கவேண்டும் இத்துடன் வங்கிப் பழக்கவழக்கங்களும் இருக்கவேண்டும்.

* ஒருநாட்டில் வணிகவங்கிகள் தவிர்ந்த எனைய நிதிநிறுவனங்கள் முக்கியம் பெறக்கூடாது.
* அதேபோன்ற வணிகவங்கிகள் யாவும் மத்திய வங்கியை தலைமை வங்கியாக ஏற்று அதற்கு ஏற்ப ஒழுக வேண்டும்.

பிரித்தானிய, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் இவை நன்றாக இருப்பதால் இந்தப் பங்குச் சந்தை நடவடிக்கை முறை வெற்றியளிக்கின்றது. வளர்முக நாடுகளில் வங்கிப் பழக்கமுறை குறைவாகவும், மக்களும் நிதி நிறுவன ஆவணங்களைக் கொள்வனவு செய்வதில் நாட்டமற்றும் இருப்பதனாலும் நிதிநிறுவனங்கள் வளர்ச்சிய டையாமல் இருப்பதாலும் பங்குச்சந்தை நடவடிக்கைமுறை வெற்றிய ளிக்கவில்லை என்றே கூறலாம். இலங்கையில் பங்குச் சந்தை நடவ டிக்கை முறை 1967இல் 3 மாத, 6மாத உண்டியல்கள் வெளியிடப் பட்டும் வணிக வங்கிகள் மட்டுமே இதைக் கொள்வனவு செய்தன. ஏனைய நிதி நிறுவனங்களோ மக்களோ இதைக் கொள்வனவு செய்ய வில்லை. எனவே இலங்கையைப் பொறுத்தவரை பங்குச் சந்தை நடவடிக்கை முறை மொத்தப் பண நிரம்பலில் போதிய மாற்றத்தை ஏற்படுத்தாது என்றே கூறலாம் ஆனால் அண்மையில் பகிரங்கச்சந்தை நடவடிக்கை முறை ஈடுபடுத்துவதற்கான சாத்தியக்கூறு தென்படுகின்றது.

## மாறும் ஒதுக்க வீதம்

மத்திய வங்கி வங்கிகளின் வங்கியாகத் தொழிற்படுவதால் வணிக வங்கிகளின் திரவத் தன்மையைப் பேண வேண்டிய அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. திரவத் தன்மையைப் பேணுவதற்கு ஒரு வழியாக வங்கிகளின் வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட அளவு பணம் ஒதுக்கு வீதமாக மத்திய வங்கியில் வைத்திருக்கப்படுகிறது. இதை மாற்றும் அதிகாரம் மத்திய வங்கிக்கு உண்டு. இப்படி மத்திய வங்கி செய்வதால் வணிக வங்கிகளின் பணம் வெளியில் செல்லாது. பண ஆக்கம் குறைக்கப்பட்டு பண நிரம்பல் கட்டுப்படுத்தப்படும். ஒதுக்குவீதம் குறைக்கப்பட்டால் வங்கிகளில் கட னாக்கம் கூடி நாட்டில் பண நிரம்பல் ஏற்படும். இந் நிகழ்ச்சி வெற்றி யளிக்க வேண்டுமெனில் நாட்டில் வங்கி நடவடிக்கை நன்கு விருத்தியடைந் திருக்க வேண்டும். அடுத்து இந்நடவடிக்கை மத்திய வங்கி தவிர்ந்த ஏனைய நிதி நிறுவனங்கட்கும் பொருந்த வேண்டும். அதாவது நாட்டின் பெருமளவு பண நிரம்பலுக்கு வணிக வங்கிகள் பொறுப்பாக இருக்க வேண்டும். ஆனால் குறைவிருத்தி நாடுகளில் வங்கிப் பழக்க வழக்கங்கள் நன்கு வளர்ச்சியடையாத காரணத்தினாலும், ஏனைய நிதி நிறுவனங்கள் நன்கு வளர்ச்சியடையாத தன்மையினாலும் மாறும் ஒதுக்கு வீதம் நாணய நடைமுறையில் அவ்வளவு வெற்றியளிக்குமெனக் கூறமுடியாது 1950ம் ஆண்டு இலங்கை மத்திய வங்கிக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத் தின்படி கேள்வி வைப்பு ஒதுக்கு வீதம் 10% - 40 % வரையும் தவணை வைப்புகட்கு 10% - 20% இருந்தும் 1960 மட்டுமே கேள்வி வைப்பு ஒதுக்குவிதம் 10% லிருந்து 12% ஆக உயர்த்தப்பட்டது. இது தவிர இலங்கையில் வங்கி வரலாற்றில் மாறும் ஒதுக்கு வீதத்தில் மாற்றம் ஏற்படவில்லை.

எனவே நாணய நடைமுறையை ஒழுங்குபடுத்த மேற்கூறப்பட்ட மரபு ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் செயல் இழந்தவையாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே குறைவிருத்தி நாடுகள் தமக்கு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய நாணய நடைமுறைக் கொள்கையைக் கையாளுகின்றன. இதனால் குறைவிருத்தி நாடுகள் ஒன்று பண நிரம்பலைக் கட்டுப்படுத்த வேண்டும். இரண்டு பொருளாதார வளர்ச்சியைக் கூட்ட வேண்டும். இரண்டு முரண்பட்ட கொள்கைகட்கு மத்தியில் தீர்வு ஏற்படுத்த சுமுகமான தெரிவுக்கடன் கட்டுப்பாட்டுக் கொள்கையே சிறந்ததாகக் கொண்டு அதைக் கையாளுகின்றது. இலங்கை மத்திய வங்கி 1960 இன் பின் ஏற்பட்ட சென்மதி நிலுவைப்

பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் நாட்டின் பண நிரம்பலை ஒழுங்குபடுத்துவதற்காகவும் தெரிவுக்கடன் கட்டுப்பாட்டுக் கொள்கையை கடைப்பிடித்து வருகின்றது. அவையாவன.

1. எல்லைக்கடன் கட்டுப்பாட்டுக் கொள்கை.
2. சிறப்பு ஒதுக்க வீதம்.
3. மெய் ஆதனக் கட்டுப்பாடு.
4. தொழிலடைப்பு.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளையே குறைவிருத்தி நாடுகளின் மத்திய வங்கியும் கையாண்டு வருகின்றது.

**எல்லைக்கடன் கட்டுப்பாட்டுக் கொள்கை.**

1960ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சென்மதி நிலுவைப் பிரச்சனையைச் சீராக்கவும் பண நிரம்பலைக் கட்டுப்படுத்தவும் உப ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்வதைக் குறைக்க உத்தேசித்து இப்படிப்பட்ட இறக்குமதியாளர்கட்கு வணிக வங்கிகள் வழங்கும் கடனைக் குறைக்க கடன் எல்லை விதிக்கப்பட்டது. இப்படிப்பட்ட இறக்குமதியாளருக்கு வணிக வங்கிகள் வழங்கும் கடனில் 50% ஐ தேசிய வங்கியிடம் ஒதுக்க வேண்டும் என விதிக்கப்பட்டது. இதன் மூலம் ஆடம்பர இறக்குமதி குறைக்கப்பட்டு வணிக வங்கிகளின் கடன் குறைக்கப்பட்டதால் நாட்டின் பண நிரம்பல் கட்டுப்படுத்தபட்டது.

**சிறப்பு ஒதுக்க வீதம்**

1961ம் ஆண்டு இலங்கையில் சிறப்பு ஒதுக்க வீத மூலம் வணிக வங்கிகளின் கடனாக்கம் குறைக்கப்பட்டது. 1961ல் மக்கள் வங்கி தவிர்ந்த ஏனைய வங்கிகள் வழங்குகின்ற கடனில் 38% சிறப்பு ஒதுக்க வீதமாக வைக்க வேண்டும் எனக் கையாளப்பட்டது. 1961ல் மக்கள் வங்கி உருவாக்கப்பட்டதால் இது வங்கியின் வளர்ச்சிக்கு தடை ஏற்படும் என்பதற்காக அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு 1965 இல் இதற்கு 28% சிறப்பு ஒதுக்க வீதம் வைக்க வேண்டுமெனக் கையாளப்பட்டது.

**மெய் ஆதனக்கட்டுப்பாடுகள்**

1962, 1963 காலப் பகுதிகளில் வெளிநாட்டவரின் பெரும் தோட்டங்களை இலங்கையர்கள் கொள்வனவு செய்ய இவர்கட்கு பெருமளவு கடன் வணிக வங்கிகளால் வழங்கப்பட்டது. இதனால் நாட்டில் பண நிரம்பல் ஏற்படுமென்று கருதி இப்படியான காரணத்திற்கு வணிக வங்கிகள் வழங்கும் கடனில் $33\frac{1}{3}\%$ ஐ மத்திய வங்கியில் ஒதுக்க வேண்டுமென விதிக்கப்பட்டது. இதனால் வணிக வங்கிகள் மெய் சொத்துக்களைக் கொள்வனவு செய்ய வழங்கும் கடன் அளவு குறைக்கப்பட்டு பண நிரம்பல் கட்டுப்படுத்தப்பட்டது.

**தொழில் அடைப்பு**

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக் இருக்கும் தொழிலுக்கு வணிக வங்கிகள் வழங்கும் கடனில் பெருமளவைக் குறைத்து அத்தொழில் வளர்ச்சியடையாது தடுத்தலாகும். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும் தொழில்களையே குறிக்கும்.

இலங்கை மத்திய வங்கிக்கு வணிக வங்கிகள் வழங்கும் கடனை 100% ஐயும் கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டு. இருந்தும் இதை மத்திய வங்கி நடைமுறைப்படுத்துவதில்லை. ஏனெனில் இவ்வாறு நடந்தால் வங்கித் தொழில் நாட்டில் முறிவடையலாம் என்பதற்காகவாகும்.

(தொடரும்)

**நம்பிக்கையில் மூடநம்பிக்கை குருட்டு நம்பிக்கை, கெட்டிக்கார நம்பிக்கை எதுவும் கிடையாது. சொல்லப்போனால் நம்பிக்கை என்பதே ஒரு மூடத்தனம் அதிலே தனியாக ஒரு மூட நம்பிக்கை ஏது?**

(கவியரசு)

குமாரசாமி தெட்ஷணாமூர்த்தி - பீடாதிபதி - விவசாயபீடம்

# பீடை நாசினிகளின் பயன்பாடும் தொடர்பான பிரச்சினைகளும்

பீடை நாசினி (Pesticide) என்னும் பதம் பூச்சி நாசினிகள் (insecti cide), சிற்றுண்ணி கொல்லிகள் (acaricide), பூஞ்சண நாசினிகள் (Fungicide), களைநாசினிகள் (weedicide), விலாங்குப்புழு கொல்லிகள் (nematocide), பற்றீரியா கொல்லிகள் (bactericide), கொறிப்பான் கொல்லிகள் (Rodenticide), நத்தை கொல்லிகள் (Molltuscicide) என்பனவற்றை உள்ளடக்கியதாகும். இவை விவசாயத்தில் மட்டுமல்ல மலேரியா, யானைக் கால் நோய், பிளேக், சொறி, முதலான நோய்கள் ஏற்படுத்தும் காவிகளைக் கட்டுப்படுத்தவும், வீட்டிலுள்ள இலையான் நுளம்பு, கரப்பான் முதலானவற் றைக் கட்டுப்படுத்தவும் மரப்பொருட்களை பூச்சிகளிலிருந்து பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. பீடைகள் என்னும் சொல் பயிர்வகைகளுக்கும் மனிதருக்கும் வளர்ப்பு மிருகங்களுக்கும் ஊறுவிளைவிக்கும் அனைத்து தாவர விலங்கு அங்கிகளையும் உள்ளடக்கியதாகும். ஆயினும் நோய் என்று சொல்லும் போது அது நுண்ணங்கிகளினாலும் சூழற்காரணிகளி னாலும் ஏற்படும் தாக்கத்தையே பெரும்பாலும் குறிக்கின்றது. சில தசாப்தங்களுக்கு முன்னர் நடைமுறையிலிருந்த விவசாய முறையில் நோய் பீடைத் தாக்கங்கள் குறைவாகவே காணப்பட்டன அப்போது பயிரிடப்பட்ட பயிர் வர்க்கங்கள் குறைவான விளைச்சலைத் தந்தாலும் நோய் பீடைகளுக்கு எதிர்ப்பு சக்தி கொண்டனவாகக் காணப்பட்டன பெரும்பாலும் கலப்பு முறையிலான பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டமையினால் நோய் பீடைகள் பெருகிப் பரவுவதற்கும் வாய்ப்பு இருக்கவில்லை. அண்மைக் காலங்களில் அறிமுகமான உயர் விளைச்சல் தரும் பயிரினங்களிற் பெரும்பாலானவை துரதிட்டவசமாக நோய் பீடைகளினால் எளிதில் பாதிக்கப்படக் கூடியனவாகவே இருக்கின்றன. தற்போது பெரும்பாலும் மேற்கொள்ளப்படும் தனிப்பயிர்ச் செய்கை முறையும் நோய்களும் பீடைகளும் பல்கிப் பெருகுவதற்கு வாய்ப்பாக அமைகின்றது. இக்கார ணங்களினால் பீடைநாசிகள் இன்று தவிர்க்க முடியாத விவசாய உள்ளீடாக மாறிவிட்டன.

பூச்சிநாசினிகள் இல்லாதிருப்பின் மலேரியா, மஞ்சட்காய்ச்சல் (Yellow fever), தூக்கநோய் (Sleeping sickness) முதலானவற்றைக் கட்டுப்படுத்த முடியாமற் போயிருக்கலாம். 1950ம் ஆண்டளவில் உலகில் 200 மில்லியன் மக்கள் மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அப்போது ஆட்க் கொல்லி நோயாகவே அது கருதப்பட்டது. இலங்கையின் பல பகுதிக ளிலிருந்தும் மக்கள் இடம் பெயர்வதற்கும் அது காரணமாகவிருந்தது. ஆனால் DDT பயன்பாட்டினால் 1960ம் ஆண்டில் இந்நோய் பெருமளவு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவ்வாறே மஞ்சட் காய்ச்சலை ஏற்படுத்தும் நுளம்பும், தூக்கநோயை ஏற்படுத்தும் "செட்சீ" ஈயும் (Tsetse fly) பூச்சி நாசினிகளினால் நன்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

உலகின் விவசாய உற்பத்திப் பொருட்களில் மூன்றிலொரு பங்கு பூச்சிகளினால் சேதப்படுத்தப்படுகின்றன. இதில் 20,000இற்கும் மேற்பட்ட பூச்சியினங்கள் பங்கு கொள்வதாக அறியப்படுகிறது. பூச்சி நாசினிகள் இன்றி இந்த இழப்பைச் சீர்செய்வது சுலபமான காரியமன்று பூச்சிகளைப் போல் பூஞ்சண, பற்றீரிய, வைரஸ் நோய்களும் பயிர்களில் பெரும் சேதத்தை விளைவிக்கின்றன. 1945 ம் ஆண்டு மேற்கு ஐரோப்பியா, அயர்லாந்து முதலான நாடுகளில் உருளைக்கிழங்குச் செய்கை உருளைக்கிழங்கு வெளிறல் (Potato Blight) என்னும் பூஞ்சண நோயினால் முற்றாக அழிந்து பஞ்சம் ஏற்பட்டமையினால் 1.5 மில்லியன் மக்கள் இறந்ததையும் 1869 ம் ஆண்டு இலங்கையில் துருநோயினால் (coffee Rust) கோப்பிச் செய்கை முற்றாக அழிந்து போனதையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். பூஞ்சண நோய்களைக் கட்டுப்படுத்த பூஞ்சண நாசினிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. வைரஸ் நோய்களைக் கட்டுப்படுத்த காவிகளாக இருக்கும் பூச்சிகளுக்காக பூச்சி நாசினிகள் பயன்படுத்தப்படுகின்றன. பற்றீரியா நோய்களுக்காக இரசாயனங்கள் குறைவாகவே பாவிக்கப்படுகின்றன. பயிர் வகைகளிலும் மனிதரிலும் வளர்ப்பு மிருகங்களிலும் தீங்கு விளைவிக்கும் பூச்சியினங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் பல நூறு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கி. பி. 1500 ம் ஆண்டளவில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த சில இரசாயனங்கள் பயன்பாட்டில் இருந்ததாகத் தெரியவருகிறது. ஆனால் இரசாயன பீடைநாசினிகளின் பயன்பாடு 19ம் நூற்றாண்டின் விஞ்ஞான கைத்தொழில் புரட்சியுடனே ஆரம்பித்திருக்கிறது. 1867ம் ஆண்டு பாரிஸ் கிறீன் (Paris Green) என்னும் பூச்சி நாசினி அமெரிக்காவில் முதன்முதலாக அறிமுகமாகியது. இதைத் தொடர்ந்து 1882ம் ஆண்டு போடோக்கலவை பங்கசு நாசினியும் 1897இல் செப்புசல்பேட் பங்கசு நாசினியும் அறிமுகப்படுத்தப்பட்டது. 1939இல் DDT பூச்சி நாசினி அறிமுகமானதிலிருந்து இரசாயன பீடை நாசினிகளின் யுகம் உதயமாயிற்று.எனலாம். முல்லர் (Mueller) என்பவர் DDT ஐக் கண்டு பிடித்தமைக்காக நோபல் பரிசையும் பெற்றுக் கொண்டார். ஆனால் அதன் பின் விளைவுகள் பாரதூரமாக இருந்து விட்டன. இதைத் தொடர்ந்து பல்வேறு வகையான பீடை நாசினிகளும் பாவனைக்கு வரத் தொடங்கின. வருடாவருடம் அவற்றின் பாவனையும் அதிகரிக்கத் தொடங்கியது. பீடைநாசினிகளைப் பெருமளவில் பயன் படுத்தும் நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது. 1980 - 1986 கால இடைவெளியில் அவற்றின் பயன்பாடு அதிகரித்திருப்பதை அவதானிக்கலாம் இதன் பின்னர் இந்த நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## இலங்கையில் பீடை நாசினிகளின் பயன்பாடு

(மெற்றிக் தொன் அல்லது கிலோ லீற்றர்)

| பீடைநாசினி வகை | 1980 | 1986 | அதிகரிப்பு % |
|---|---|---|---|
| பூச்சிநாசினி | 655 | 1352 | 106 |
| களைநாசினி | 695 | 2183 | 214 |
| பூஞ்சணநாசினி | 315 | 721 | 128 |

பீடை நாசினிகள் இல்லாதிருந்தால் பயிர் விளைவில் சராசரி 35 சதவீதத்திற்கு மேல் இழப்பு ஏற்படும், என்றும் மலேரியா முதலான நோய்களைக் கட்டுப்படுத்துவது முடியாமற் போயிருக்கும் என்று கூறப்படுகின்ற போதிலும் இவற்றின் பயன்பாட்டினால் தோன்றி வரும் பொருளாதார, சூழற் பிரச்சினைகள் மிகவும் அச்சம் தருவன வாகக் காணப்படுகின்றன. இன்று உலகளாவிய ரீதியில் சூழலை மாசுறச் செய்வதில் பீடைநாசினிகளே பிரதான இடத்தை வகிக்கின்றன.

களைகள் பயிர்விளைவில் 30 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரை பாதிப்பை ஏற்படுத்துகின்றன. முதல் மூன்று கிழமைகளிலும் களைகட்டப்படாத மானாவரி நெற் செய்கையில் 75 சதவீதமும் பாசன நெற் செய்கையில் 50 சதவீதமும் விளைச்சல் பாதிக்கப் பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. பலவித பீடைகளுக்கும் நோய் காவிகளுக்கும் நோய் தரும் நுண்ணங்கிகளுக்கும் இடைக்கால விருந்து வளங்கிகளாக இருந்தும் இவை பயிர் விளைச்சலைப் பாதிக்கின்றன. விளைபொருட்களின் தரத்தையும் அவை குறைக்கின்றன. களைநாசினிகளின் பயன்பாடு சிக்க னமாகவும் இலகுவாகவும் இருப்பதனால் களைகட்டலில் அவை பிரதான பங்கினை வகிக்கின்றன. இவற்றினால் மண்ணிலும் நீரிலும் ஏற்படும் சூழற் பிரச்சினைகள் அதிகமாகும்.

1985ம் ஆண்டில் 2300 மில்லியன் கிலோ இரசாயன பீடை நாசினிகள் உலக நாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வளர்முக நாடுகள் இதில் 15 சதவீதத்தை மட்டுமே பயன்படுத்தியுள்ள போதிலும் பீடை நாசினிக ளினால் ஏற்படும் பொருளாதார சூழல் பிரச்சினைகள் இந்த நாடுகளிலேயே மிக அதிகம் காணப்படுகின்றன. வளர்முக நாடுகளிற் பெரும்பாலானவை அயன மண்டல சூழலைக் கொண்டிருப்பதனால் தாவர நோய்களும், பீடைகளும் துரிதகதியில் பெருகுவதற்கு ஏற்ற சூழல் அங்கு காணப்படு கின்றது. அத்துடன் வளர்ச்சியுற்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாகக் கைக்கொள்ளப்படாமையினாலும். நச்சுத் தன்மை கூடிய இரசாயனங்களின் பயன் பாட்டில் போதிய கட்டுப்பாடு இன்மையினாலும் இந்த நாடுகளில் பீடைநாசி னிகளின் பயன்பாட்டினால் விளையும் தீமைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. அண்மைக்காலம் வரை பீடை நாசினிகளை உற்பத்தி செய்யும் அமெரிக்கா முதலான நாடுகளிலும் ஏனைய வளர்ச்சியுற்ற நாடுகளிலும் தடைசெய்யப்பட்ட பல பீடைநாசினிகள் இலங்கை போன்ற நாடுகளில் தாராளமாகப் பயன்பட்டு வந்ததையும் நாம் அவதானிக்கலாம். 1980ம் ஆண்டின் 33ஆம் இலக்கப் பீடை கொல்லி கட்டுப்படுத்தற் சட்டத்தை இலங்கையரசு அமுல் நடத்திய போதும் சில நடைமுறைக் காரணங்களினால் தீவிர நச்சுத்தன்மை கொண்ட பீடைநாசினிகள் பல தொடர்ந்தும் இறக்குமதியாகி வந்துள்ளன. தற்போது அரசு இதில் அதிக கவனம் செலுத்துவது வரவேற்கத்தக்கது.

பீடை நாசினிகளினால் ஏற்படும் பொருளாதார சூழற்பிரச்சினை களைப் பின்வருமாறு இனங்காணலாம்.

## அ) மனித உயிரிழப்பு

உலகளாவிய ரீதியில் வருடாவருடம் 3 மில்லியன் மக்கள் பீடை நாசினிகளினால் நஞ்சூட்டப்படுகின்றார்கள் அவர்களுள் 20,000 பேருக்கும் அதிகமானோர் மரணிக்கிறார்கள் அண்மையில் வந்த எஸ்கப் (ESCAP) நிறுவனத்தின் அறிக்கையில் பீடைநாசினிகளினால் இரண்டு மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் அதில் 40,000 பேர் உயிர் இழப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கையில் கைத்தொழில் நாடுகள் உற்பத்தியாகும் பீடைநாசினிகளில் 85 சதவீதத்தை பயன்படுத்திய போதும் வளர்முக நாடுகளிலேயே 13மடங்கு கூடுதலான பீடைநாசினி நஞ்சூட்டல் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார சபையின் (WHO) அறிக்கை மூலம் வளர்முக நாடுகளில், ஒவ்வொரு நிமிடமும் யாராவது ஒருவர் பீடைநாசினியினால் பாதிக்கப்படுகின்றாரென்றும் 1 மணித்தியாலம் 45 நிமிடத்திற்கொருதடவை ஒருவர் பீடைநாசினியினால் இறக்கிறார் என்றும் அறிய முடிகின்றது.

இலங்கையில் 1989ம் ஆண்டில் 1297 பேர் பீடைநாசினிகளினால் இறந்துள்ளார்கள். ஆண்டுதோறும் சராசரியாக 3,000 பேர் பீடைநாசினி பாதிப்பினால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள் வைத்தியசாலைகளில் ஏற்படும் மரணங்களில் பீடை நாசினிகளினால் ஏற்படும் மரணம் ஆறாவது இடத்தில் காணப்படுகின்றது. ஆனால் விவசாயம் செய்யும் 6 மாவட்டங்களில் இத்தகைய மரணம் முதலாவது இடத்தில் இருக்கின்றது.1980 - 89ம் ஆண்டு கால இடைவெளியில் பீடைநாசினி நஞ்சூட்டல் காரணமாக ஒவ்வொரு 100.000 மக்கள் தொகைக்கும் 80-108பேர் வைத்தியசாலைகளில் அனுமதியளிக்கப்பட்டுள் ளார்கள். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இத்தொகை மிக அதிகமாகும். இத்தொகையில் 60 சதவீதத்தினர் தற்கொலை நோக் கத்திற்காகவும் 40 சதவீதம் கவனக்குறைவினாலும் நஞ்சூட்டப்படுகின் றார்கள். இலங்கையில் பெருமளவு பயன்படுத்தப்படும் மூன்று வகைப்பூச்சி நாசினிகளில் ஒகனோபொசுபேற் (Orgnophosphate) வகைகளினால் 73 சதவீதநஞ்சூட்டலும் ஒகனோ குளோறின் (Organochiorine) வகைக ளினால் 4 சதவீத நஞ்சூட்டலும் காபமேற் (Carbamate) வகைகளினால் 9 சதவீத நங்சூட்டலும் ஏற்படுவதாக அறியப்படுகின்றது. களைகொல்லி களினால் ஏற்படும் நஞ்சூட்டலில் 70 சதவீதம் பரகுவாட்டினால் ஏற்படு கின்றது. (Ravindra Fernando 1995) உயிரிழப்பை விட, உடலில் தங்கி நின்ற உயிராபத்தை ஏற்படுத்தும் பல நோய்களையும் உடற் கோளாறுகளையும் பீடைநாசினிகள் எற்படுத்துகின்றன. இவற்றள் புற்று நோய், குறைப்பிரசவம், நரம்பு சம்பந்தமான நோய்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

## ஆ) பீடை நாசினிகளை எதிர்த்து வாழும் பூச்சிவகைகளும் நோய் விளைவிக்கும் நுண்ணுயிர்களும் உருவாதல்.

பீடைநாசினிகளைத் தொடர்ந்து பாவித்து வரும் போது, தப்பி வாழும் பூச்சிகள்

பீடை நாசினிகளை எதிர்த்து வாழக்கூடிய இனங்களாக மாறிவருகின்றன. எனவே இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு செறிவு கூடிய பீடைநாசினிகளையோ வேறுவித பீடைநாசினிகளையோ பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதனால் புதிய சூழற்பிரச்சினைகள் தோன்றுவதுடன் பீடைக்கட்டுப்பாட்டிற்கான செலவும் அதிகரிக்கின்றது. 1984ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் 447 வகைப்பூச்சி யினங்களும் 100 தாவர நோய்க்கான பங்கசு, பற்றீரியா வகைளும், 55 களைப்பூண்டுகளும், 2 வகையான விலாங்குப்புழுக்களும் 5 வகையான கொறிக்கும் விலங்குகளும் பீடை நாசினிகளை எதிர்த்து வாழ்வனவாக இனங்காணப்பட்டுள்ளன. அத்துடன் இதுவரை தீங்குவிளை விக்காத பூச்சிகள் பல தீங்கு விளைவிக்கும் குல வகைகளையும் தோற்றுவித் துள்ளன. இலங்கையில் நெல் கபில நிறத்தத்திகளின் (BPH) தீவிரத்தன் மையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இலங்கை நெல் வயல்களில் பெருமளவு பூச்சிநாசினிகள் பயன்பட்டு வருவதனால் 1970 ம் ஆண்டுவரை தீவிர தாக்கத்தை ஏற்படுத்தாத கபில நிறத்தத்திகள் மத்தியில் தீவிரத் த்ன்மை கொண்ட புதிய குலவகைள் (Bio Type) உருவாகியமையே இதற்குக் காரணமாகும். 1970ம் ஆண்டில் இந்தப் பீடையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை மாவட்டங்களில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் விளைந்த பயிர்கள் நாசமாகியதை நாம் அறியலாம். இது போல சில மாதங்களுக்கு முன்னர் (1977 ஜுலை) மஞ்சட்புள்ளி வெட்டுகிளிக் குலவகையொன்று உருவாகி குருணாகலை மாவட்டத்தில் பலவித ஆண்டுப் பயிர்களையும் பல்லாண்டு பயிர்களையும் அழித்துச் சேதத்தை உண்டு பண்ணி வருவதையும் குறிப்பிடலாம்.

## இ) இயற்கையிலமைந்த பீடைக்கட்டுப்பாடு சீர்குலைதல்

இயற்கையில் உயிரினங்களின் மத்தியில் ஒரு சமநிலை இருப்பதைக் காணலாம். தீங்கு தரும் பூச்சியினங்கள் இயற்கைச் சூழலிற் காணப்படும் இரை கவ்விகளினாலும் ஊன் சூறையாடிகளினாலும் ஒட்டுண்ணிகளினாலும் நோய் தரும் நுண்ணங்கிகளினாலும் அதிக அளவிற் பெருகா வண்ணம் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்தச் சூழலில் பீடை கொல்லிகளைப் பயன்படுத்தும் போது அவை பீடைகளை மட்டும் அழிக்காமல் நன்மை தரும் இவ்வாறான இயற்கை எதிரிகளையும் அழிவிற்கு உள்ளாக்குகின்றன. இதனால் தீங்கு தரும் பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து பீடைக்கட்டுப்பாடு மேலும் சிரமமாகின்றது. தற்போது மரக்கறி வகைப்பயிர்களுக்கும், மிளகாய், பருத்தி முதலான பணப்பயிர்களுக்கும் பல தடவைகள்பூச்சிநாசினிகள் பயன்படுத்தப்படுகின்றன. சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் பருத்தியிலும் மிளகாயிலும் 5-6 தடவை வரை விசிறப்பட்ட பூச்சி நாசினிகளைத் தற்போது 15 -16 தடவைகள் விசிறப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


## ஈ) சூழல் மாசுறல்

பயன்படுத்தப்படும் பீடைநாசினிகளின் ஒரு சிறு பகுதி மட்டுமே பீடைகளைச் சென்றடைகின்றன. பெரும்பகுதி விளையும், மண்ணையும் நீரையும் சென்றடைந்து

உயிரினங்களுக்குப் பல தீமைகளை விளை விக்குகின்றன. இதனால் பல நன்மை தரும் உயிரினங்களும் (தேன்பூச்சி, மண்புழு, மீனினங்கள், நன்மை தரும் நுண்ணுயிர்கள்) அழிவிற்குள்ளாகின்றன. குறிப்பாக நீர் வாழ் உயிரினங்கள் பீடை நாசினிகளினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.


## 2. பீடைநாசினிகள் உணவுச் சங்கிலியில் விருத்தியடைதல்.

பிரிந்தழியாத பீடைநாசினிகள் இலகுவாக உணவுச்சங்கிலியில் சேர்ந்து செறிவில் விருத்தியடைகின்றன. இவை ஈற்றில் மனிதரையும் சென்றடைந்து உடலிற் தேங்கிவிட ஏதுவாகின்றது. இதற்கு நல்லதோர் உதாரணமாக டச். எம்.(Dutch Elm) என்னும் நோயில் DDT பயன் பாட்டைக் குறிப்பிடுவார்கள். இந்த நோய்க்காக DDT ஐப் பயன்படுத்திய போது மரத்தின் இலைகளில் 183 - 283 ppm DDT காணப்பட்டது. இந்த மரத்தின் கீழுள்ள மண்ணில் அது 1 - 8 ppm ஆகவும், மண்ணிலுள்ள மண் புழுக்களின் கழிவுகளில் 120 ppm ஆகவும் காணப்பட்டது. இந்த மண்புழுக்களை உண்ட சிலபறவைகள் இறந்தன. இவற்றின் மூளையில் DDT .இன் அளவு 342 ppm ஆகவும் உயர்ந்திருந்தது. கால் நடைகளின் பாலிலும், முலைப்பாலிலும் DDT இன் செறிவு அவதானிக்கப்பட்டுள்ளது. 1940இலும், 1960 இலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் கழுகு, வல்லூறு போன்ற பல பறவைகளின் எண்ணிக்கையில் குறைவை ஏற்படுத்தியதையடுத்து DDT பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டது. ஆனால் இலங்கையில் மிக அண்மையிலேயே DDT இன்பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. 1977 ம் ஆண்டு கலிபோனியாவிலுள்ள கிளியர் லேக் என்னும் ஏரியில் நடந்த ஆய்வுகளும் இதனை நிரூபிக்கின்றன. ஏரியில் 1 பங்காக இருந்த DDD (DDT பிறந்தழியும் போது உண்டாவது) நீர்ப்பறவையில் 80.000 மடங்காக எவ்வாறு அதிகரித்தது என்பதைக் காணலாம்.




இந்த உணவுச் சங்கிலியில் சிறுமீனை, ஊனுண்ணி மீனை அல்லது வாத்தை மனிதன் உணவாகக் கொள்வானாகில் அவனது உடம்பிலும் DDT போன்ற பீடைநாசினிகள் இன்னும் அதிக அளவில் விருத்தியடைதல் சாத்தியமாகும்.

## பூச்சி நாசினிகளின் பக்க விளைவுகள்





# பிசுபிசுப்பு

*சஞ்சீவி சிவக்குமார்*

செங்கலடிக்குப் போய் வந்த வியர்வைப் பிசுபிசுப்பு. இல்லை சில வியர்வைகளும், பிசுபிசுப்புகளும் என்பதுதான் மிகப் பொருத்தம். சமாதானத்தைப் போல வரமறுக்கும் ஆகஸ்ட் காற்று. குட்டையில் நீர் குடிக்கும் நாயின் 'லவக், லவக்' எனக்குச் சினமூட்டியது. குட்டையின் அழுக்கு பற்றி அதற்கு என்ன கவலை. தாகம் தீர வேண்டும் அவ்வளவு தான். நேற்றுவரை இதை பராக்காகப் பார்த்திருப்பேன். இன்று வெறுப்புத் தான் வந்தது. கூடவே "அருவி நீர் வார்ந்தோடினாலும் நாய்க்கு நக்கல் தண்ணிதான்" எனும் அம்மா சொல்லும் பழமொழியும் ஞாபகத்தில் தட்டி யது. ஏன் இந்த மாற்றம் சிலவேளை இன்றைய பத்திரிகைச் செய்தியோ, நேரடியாகக் கண்ட அனுபவங்களோ அல்லது அவலங்களோ அல்லது இவை எல் லாமோ இதற்கு காரணமாய் இருக்கலாம். "நாய்க்கு நக்கல் தண்ணிதான்" என்று அழுத்தி உச்சரித்து வெறுப்புத்தீயில் எண்ணெய் வார்த்துக் கொண்டேன்.

ஊரில் சிவகுருநாதன் அண்ணன் கதாப்பிரசங்கம் ஒன்றில் கூறியது அருவுருவக் காட்சிப் படிமங்கள் போல நிழலிட்டது. அவரின் ஆன்மீகக் கருத்துப்படி நாய் பிறப்புச் சங்கிலியில் கடைசிப் பிறப்பாம். எனக்கு பிறப்புச் சுழற்சியில் நம்பிக்கையில்லை. நாய்களின் வாழ்க்கைப் பரம்பல் பற்றி அவர் வியாக்கியானம் செய்வார். தெருநாய், சொறிநாய், காவல்நாய், மோப்ப நாய், வளர்ப்பு நாய் **(Pet dog)**, பொக்கட் நாய் **(Pocket dog)**...... காரின் பின் சீற்றில் எஜமானியின் அருகில் இருந்து பயணம் செய்யும் நாயில் இருந்து அலைந்து திரியும் தெரு நாய்கள் வரை....... இறைச்சியும் போசணை பிஸ்கட்டும் சாப்பிடும் மேல்நிலை நாயில் இருந்து முள்ளுக்கும் என்புக்கும் அலையும் இதுகள் வரையும்......" என்று அவர் முற்பிறப்பின் பாவ புண்ணியங்களுடன் நாய்களின் வகைகளைப் பொருந்திக் காட்டுவார். என்னைப் பொறுத்தவரை இவை எல்லாமே நாய்கள் தான். வாலாட்டிக் கொள்வதால் வாழ்க்கையோட்டும் ஜீவன்கள். "உட்காந்து கொண்டு உயிர் வாழ்வதைவிட நின்று கொண்டு சாகலாம்" என்பது ஒருபோதும் உறைக்காத வைகள். கோயில் கதாப்பிரசங்கங்களில் இவற்றை எல்லாம் கேட்டு யாரும் திருந்தியிருப்பார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. நாதன்

அண்ணருக்கும் இந்த நம்பிக்கை இருக்குமோ என்னவோ. எல்லாம் ஒரு பேச்சுக்குத்தான். மாஜிக் காட்சி போன்ற அவரின் பேச்சு எனக்கு மட்டு மட்டாக சில புரிதலை மட்டும் தந்திருக்கிறது. சிலது சிலவற்றுக்கு அச் சொட்டாய்ப் பொருந்தும் எல்லாம் எல்லாவற்றுக்கும் பொருந்தாது என்பது வரை.......


போட்ட வேசத்திற்கு குரைத்துக் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்யக் கிடக்கு........ என்பது போல நம்மைக் கடந்து செல்லும் முகங்கள். நாங்கள் குரைப்பதில் பொழுதுதான் விடியாவிட்டாலும் உங்கள் உறக்கத் தையாவது கலைப்போம் என்பது போலவும், வைக்கோல் பட்டறையில் கட்டிப் போட் டவை போலவும்......... விதிகளில் வளைவுக்கு வளைவு "கடிநாய் கவனம்" பெயர்ப்பலகைக்குப் பயந்து ஒடுங்கி ஒதுங்கிப் போகச் செய்யும் இந்த வாழ்வுப் படலத்தில் எதுவும் எனக்குப் பிடிபடவில்லை.

ஒருவேளை கவிஞர் சண்முகம் சிவலிங்கம்" நான் சாணம் உருட்டிய பீ வண்டு" என்று தன்னையே விழிப்பது போல எனக்கு இது சாபமோ எனப்பட்டது. அப்படியானால் உன்னால் உன்னையே அழிப்பேன் எனும் "கோடாரிப் பிடிச் சாபமோ" இதற்கு இடப்பட்டது. இந்த சாபத்தை வரமாக நினைத்து வாங்கி மகிழவும், கொண்டாடவும் இதனால் எப்படி முடிந்தி ருக்கும்.

நானும் எஜமானாக இருந்திருந்தால் நாய்களின் எஜமானிய விசு வாசம் மலைப்பையும், மகிழ்வையும் தந்திருக்கும். அடித்தாலும் வாலைக் குழைத்துக் கொண்டு பின்பற்றும் இதன் சாபம் என்னைப் பூரிக்கச் செய்தி ருக்கும். தன் இனத்தை எஜமானுக்கு முன் குரைத்துக் கலைப்பதும் குதற முயல்வதும் கூட பிடித்திருக்கும். இந்த இறுகிய முகமும் நரம்பு தளரமாட்டாமல் உறைந்து நிற்கும் நிலையும் எனக்கு வந்திராது.

தண்ணீரை நக்கி விட்டு நான் அவதானிப்பதை பார்த்து முறுகிக் கொண்டு சுவர் முறிப்பில் சிறுநீர் கழித்து விட்டு நாய் ஓடிப் போனது. இந்த "வெக்கை" எங்கு தீரப்போகிறது. நமது வாழ்க்கையே இந்த ஓயாத வியர்வைப் பிசுபிசுப்புகளுடன் தான்.....

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 22




இப்பத்திரத்தில் நிரப்பி அனுப்பப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். அனுப்ப வேண்டிய முகவரி

குறுக்கெழுத்துப்போட்டி இல - 22
பிரதம ஆசிரியர்
"கிழக்கொளி"
விவசாயபீடம்
கிழக்கு பல்கலைக்கழகம்
செங்கலடி

முடிவுத் திகதி 30. 11. 99

..........................................................................................................
இங்கே வெட்டவும்

## இடமிருந்து வலம்

01. ஓமம்
07. கால்விரலில் அணியும் ஆபரணம்
08. சோறு, கடைசி எழுத்து மறைந்து விட்டது.

09. வைசியர் - குழம்பிக் கிடக்கிறது
11. பொது இடங்களில் தடைசெய்யப்பட வேண்டியது தடைசெய்ய முடியாததால் குழம்பி விட்டது.
13. ஒரு சினிமா நடிகை
14. அச்சம், மருளுகை. நேர்மாறாக உள்ளது.
15. கலப்பு + அகம்= கடைசி எழுத்து மறைந்து விட்டது
18. இல்லை- எதிர்ச்சொல் நேர்மாறாக உள்ளது
19. மகன்
21. மறுமைக்கு எதிர்ச்சொல்- நேர்மாறாக உள்ளது.

## மேலிருந்து கீழ்

01. சுபவேளை
02. வார, மாதாந்த வெளியீடு
03. கடைந்து செய்த உணவு
04. ஒரு வகைச் செடி சர்பத்தில் சேர்க்கப்படுவது
05. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு (தலைகீழாக)
06. வேண்டுதல் வேண்டாமை
10. உடல்
12. மெழுகு குழம்பி விட்டது
13. விருட்சம்
16. விஷம் குழம்பி விட்டது
17. பச்சை நிறம்
20. இனிய தலைகீழாக உள்ளது.

## டே கனவு

ஒரு வகுப்பில் எங்கேயோ பார்த்து யோசித்துக் கொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து ஆசிரியர் "டேய்! கனவா காண்கிறாய்?" என்றார்.

"ஆமாம் சார்! டேய்க் கனவுதான் காண்கிறேன்" என்றான் மாணவன் ஆசிரியருக்குக் கோபம் வந்து விட்டது. "என்னடா! என்னையா டேய்! என்கிறாய்" என்று பிரம்பை எடுத்தார்.

"இல்லை சார்! நான் பகற் கனவு காண்கிறேன். அதாவது "**DAY** கனவு" சார் என்றான் மாணவன்.

# குறுக்கெழுத்துப்போட்டி இல 21க்கான விடைகள்

## இடமிருந்து வலம்

01. சங்கராபரணம் 06. மத்து 07 மதிமலா் 08. சய
09. ராசி, 11. தேடுக 13. ராஜயோகம் 15. கங்கணம்
17. பல 18.காணன் 19. வதம் 20. தின்றால்
21. துகம்

## மேலிருந்து கீழ்

01. சதிர்த்தேங்காய் 02. கமலக்கண்ணன், 03. ராத்திரி, 4. பதுமராகம், 05. கம்பராமாயணம், 10. யோசி, 12. கடுகதி, 14. ஜலதம், 16. கன்றா, 19. வது

விடைகளை எழுதிய நேயர்களில் ஒரு சில எழுத்துப் பிழைகளுடனான 3 வாசகர்களுக்கு ரூபா 75/- வீதம் மொத்தத்தொகை சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

01. பொ. யோகேஸ்வரி
திருமகள் வீதி, கல்லடி உப்போடை,
மட்டக்களப்பு.

02. R. சயனொளிபவன்,
இல.7, ஞானசூரியம் சதுக்கம்,
மட்டக்களப்பு.

03. க. மஞ்சுபார்கவி,
“தாரகை” மஞ்சந்தொடுவாய்.
மட்டக்களப்பு.

1.9.99க்குப்பின் கிடைத்த விடைகள் பரிசீலனைக்கு எடுக்கப்படவில்லை. இனிமேல் முடிவுத்திகதிக்கு முன் கிடைக்குமாறு விடைக்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

உத்தரவாதமுள்ள
அழகிய தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

37

# SRI KRISNNA GOLD HOUSE

**DEALERS IN GOLD & GEM JEWELLERY**

## ஸ்ரீ கிருஸ்ணா
## கோல்ட் ஹவுஸ்

ஓடர் நகைகள் 22 K என்ற உத்தவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

53 B, மெயின் வீதி,
செங்கலடி.
தொலைபேசி 065 - 40511

சகலவித-



ஆங்கில மருந்துகள்
ஆடம்பரப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
"பாட்டா" சப்பாத்து வகைகள்
அன்பளிப்புப் பொருட்கள்



செங்கலடியில் ஒரே கூரையின் கீழ் மலிவு விலை யில் கொள்வனவு செய்யச் சிறந்த ஒரே இடம்

# EASTERN MEDICAL



54, Main street,
Chenkalady.
T.P - 065 - 40172

(Prop : V. Thevathas )

With The Best Compliments From :

# *Rajahs Book Centre*

AND

# RAAJEEGAAS

129, Main Street,
BATTICALOA.

111, Main Street,
BATTICALOA.

☎ 065 - 22371

நல்வாழ்த்துக்கள்

# மர்ழியாஸ்

12, பிரதான வீதி, மட்டக்களப்பு.

திருமண பட்டுப் புடவைகளையும, சிறந்த ரக
துணிகளையும், புதிய டிசைன்களில்
தைத்த ஆடைகளையும் நியாய
விலையில் கொள்வனவு
செய்ய அனைவரும் நாட
வேண்டிய இடம்,

# MARLIYA'S

வளர்மதி - மட்டுநகர்.